# அட்டை உடைமையாளருடனான உடன்படிக்கை

முக்கியமானது: நேஷன் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி இடமிருந்தான இணைக்கப்பட்டுள்ள இவ்வட்டையில் கையொழுத்திட முன்னர் அல்லது பயன்படுத்த முன்னர் தயவுசெய்து இவ்வட்டை உடமையாளர் உடன்படிக்கையினை மிகக் கவனமாக வாசிக்கவும்.

இவ்வட்டயை ஏற்றுக்கொள்வதன் மூலம் அத்துடன்/அல்லது கையெழுத்திடுவதன் மூலம் அத்துடன்/அல்லது பயன்படுத்துவதன் மூலம் நீர் கீழே தரப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதுடன் அதன் மூலம் நீர் பிணிக்கவும்படுகின்றீர்.

1. **வரைவிலக்கணம்**

வங்கி - என்பதன் கருத்து நேஷன் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி அதன் பின்னுரிமையாளர் மற்றும் வேற்றுரிமையாளர் என்பதாகும்.

அடிப்படை அட்டை உடமையாளர் - என்பதன் கருத்து எவரின் பெயரில் வங்கி அட்டைக் கணக்கினைத் திறந்துள்ளதோ அல்லது திறக்க எண்ணியுள்ளதோ அவர் என்பதாகும்.

அட்டை - என்பதன் கருத்து வங்கியினால் வழங்கப்பட்ட நேஷன் ட்ரஸ்ட் வங்கியின் வோ்ள்ட் மாஸ்டர் கார்ட் கிறடிட் கார்ட் மற்றும் பிளாட்டினம் மாஸ்டர் கார்ட் கிறடிட் கார்ட் என்பதாகும்.

அட்டைக் கணக்கு - என்பதன் கருத்து இவ்வுடன்படிக்கையின் கீழ் அடிப்படைக் கணக்கு உடமையாளரினாலும் துணை நிரப்புக் கணக்கு உடமையாளர் (உடமையாளர்கள்) எவரேனுமிருப்பின் அவரினாலும் பெறப்படும் அல்லது உறப்படும் அனைத்து வரவுகளையும் பற்றுக்களையும் பதிவுசெய்கின்ற நோக்கத்திற்காக வங்கியினால் திறக்கப்படும் கணக்கு என்பதாகும்.

காசு முற்பணம் - என்பதன் கருத்து அட்டை, அட்டை இலக்கம் அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை பயன்படுத்துவதன் மூலம் பணத்தினை பெற்றுக்கொள்ளுமொரு செயற்பாடாகும்.

காசுமுற்பண வரையறை - என்பதன் கருத்து காசு முற்பணத்திற்காக வங்கியினால் அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வரையறை என்பதாகும்.

அட்டை உடமையாளர் - என்பதன் கருத்து வங்கி யாருக்கு அட்டையை வழங்கியதோ அந்த அடிப்படை அட்டை உடமையாளர் அல்லது துணை நிரப்பு அட்டை உடமையாளர் (உடமையாளர்கள் (எவரேனுமிருப்பின்) என்பதாகும். ‘‘அட்டை உடமையாளர்’’ என்பதன் கருத்து அடிப்படை அட்டை உடமையாளர் அல்லது துணை நிரப்பு அட்டை உடமையாளர் (உடமையாளர்கள்) (எவரேனுமிருப்பின்) என்பதாக இருத்தல் வேண்டும்.

கட்டணம் அல்லது கொடுக்கல்வாங்கல் - என்பதன் கருத்து இவ்வுடன்படிக்கையின் கீழ் விதிக்கப்பட்ட ஏற்புடைத்தான கட்டணம் மற்றும் அட்டையாளர் இணங்கிக்கொண்ட அல்லது/ வங்கிக்கு செலுத்துவதற்கு இணங்கிய அல்லது இணங்கிய/ இணங்கியிருக்கின்ற பொறுப்புக்களைக் கொண்ட மற்றைய அனைத்து பொறுப்புக்களையும் உள்ளடக்கிய அட்டையின் மூலம் செய்யப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல் என்பதாகும்.

வரவு வரையறை - என்பதன் கருத்து அட்டைக் கணக்கின் மீது வங்கியினால் அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வெளிநிற்கும் பற்று மீதி என்தாகும்.

நடைமுறை மீதி - என்பதன் கருத்து குறிப்பிட்டதொரு திகதியில் அட்டைக் கணக்கின் மீது வெளிநின்கும் மொத்த தொகை என்பதாகும்.

வருமதியாகவுள்ள குறைந்தபட்சக் கொடுப்பனவு - என்பதன் கருத்து கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியன்று செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சத் தொகையாக கூற்றில் குறித்துரைக்கப்பட்ட தொகை என்பதாகும்.

வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்கள் - என்பதன் கருத்து வெளிநாடுகளில் செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்களாகும்.

கடந்தகால நிலுவை - என்பதன் கருத்து முன்னைய கூற்றிலிருந்து (கூற்றுக்கள்) வெளிநிற்கும் செலுத்தப்படவேண்டிய ஒன்றுசேர்ந்த குறைந்தபட்ச கொடுப்பனவு என்பதாகும். நிலுவையிலுள்ள ஏதேனும் தொகை கூற்றில் தனியாக காட்டப்படுவதுடன் உடனடியாக செலுத்தப்படவேண்டியதுமாகும்.

கொடுப்பனவு செலுத்தவேண்டிய திகதி - என்பதன் கருத்து மொத்த வெளிநிற்கின்ற அல்லது அதன் ஒரு பகுதி அல்லது செலுத்தப்படவேண்டிய குறைந்தபட்ச தொகையினை வங்கிக்கு கொடுப்பனவு செய்யவேண்டிய திகதி என குறிப்பிடப்படுகின்ற திகதி என்பதாகும்.

தனிப்பட்ட அடையாள இலக்கம் - என்பதன் கருத்து தன்னியக்கக் கூற்றுப்பொறிகளூடாக அட்டையினை பயன்படுத்துவதற்காக வங்கியினால் வழங்கப்படுகின்ற அல்லது அட்டை உடமையாளரினால் தேர்வு செய்யப்படுகின்ற தனிப்பட்ட அடையாள இலக்கம் என்பதாகும்.

பிற்திகதி - என்பதன் கருத்து இத்திகதியில் கொடுக்கல்வாங்கல்கள் செய்முறைப்படுத்தப்பட்டு அட்டை கணக்கு தீர்ப்பனவு செய்யப்படுகின்றமையாகும்.

சேவை நிறுவனங்கள் - என்பது எங்கே அமைந்திருந்தாலும் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு சாதனமொன்றாக அட்டைகளை கௌரவிப்பனவாக அல்லது அட்டைகளை ஏற்றுக்கொள்வனவாகவுள்ளன.

கூற்று - என்பது அட்டைக் கணக்கு தொடர்பில் குறிப்பிட்ட திகதியில் அடிப்படைஅட்டை உடமையாளர்களும் எவரேனும் துணை நிரப்பு அட்டை உடமையாளர்களும் வங்கிக்கு செலுத்தவேண்டிய நிதியியல் பொறுப்புக்களை காட்டுகின்ற, அடிப்படை அட்டை உடமையாளர்களுக்கு வங்கியினால் அனுப்பபடுகின்ற மாதாந்த கணக்கின் கூற்றுக்கள் அல்லது மற்றைய காலாந்தர கூற்றுக்கள் என்பதாகும்.

துணை நிரப்பு அட்டை உடமையாளர் - என்பதன் கருத்து அடிப்படை அட்டை உடமையாளர் தவிர்ந்த, அடிப்படை அட்டை உடமையாளரின் கோரிக்கைக்கிணங்க அட்டை வழங்கப்பட்டவர் எவரோ அந்த தனிப்பட்டவரைக் குறிக்கும் என்பதுடன் அவருடைய கட்டணங்கள் அடிப்படை அட்டை உடமையாளரின் அடிப்படைக் கணக்கில் விதிக்கப்படும்.

தொலைபேசி-தனிப்பட்ட அடையாள அட்டை இலக்கம் - என்பதன் கருத்து அடையாள நோக்கத்திற்காக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது அட்டை உடமையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட தொலைபேசி தொடர்பான இலக்கமாகும். இவ்வசதியானது வங்கியின் தற்றுணிபின்படி கிடைக்கச்செய்யப்படும்.

மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர் - என்பதன் கருத்து அட்டையினூடாக விரிவாக்கப்பட்ட நன்மைகளை அத்துடன்/அல்லது சேவைகளை வழங்குவதற்கு தொடர்புகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்தவர் எவரோ அவரைக்குறிக்கும் என்பதாகும்.

வரவேண்டிய மொத்த குறைந்தபட்சக் கொடுப்பனவு - என்பதன் கருத்து வரவேண்டிய மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவும் நிலுவையிலுள்ளவையும் என்பதாகும். இது கூற்றில் வேறாகக் காட்டப்படுகிறது.

மொத்த வெளிநின்ற தொகை - என்பதன் கருத்து கூற்று வெளியிடப்படுகின்ற நாளன்று வங்கியினது பதிவேடுகளின்படி வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய அட்டைக் கணக்கில் வெளிநிற்கின்ற மொத்தப் படுகடன் (அட்டைக் கணக்கிலிருந்து கழிக்கப்படவேண்டிய அனைத்து கட்டணங்களும் உட்பட) மீதி என்பதாகும்.

கொடுக்கல்வாங்கல் திகதி - என்பதன் கருத்து அட்டை உடமையாளருக்கும் சேவை வழங்கும் நிறுவனமத்திற்குமிடையில் கொடுக்கல்வாங்கல் இடம்பெறும் திகதி என்பதாகும்.

அடிப்படை அட்டை உடமையாளர் மற்றும் துணை நிரப்பு அட்டை உடமையாளர் ஒவ்வொருவரும் ''அட்டை உடமையாளர்'' எனவும் ''அட்டை உடமையாளர்கள்'' எனவும் குறிப்பிடப்படுவர்.

## 2. ஏற்புடைத்தான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் சட்டபூர்வ இணங்குவிப்புக்களும்

2.1 அட்டை அல்லது அட்டைக் கணக்கு தொடர்பில் எவரேனும் ஆளுக்கு அல்லது அது தொடர்பில் வங்கியினால் கிடைக்கச் செய்யப்பட்ட அனைத்து வசதிகளும் இவ்வுடன்படிக்கையில் காட்டப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நடைமுறையிலுள்ள, காலத்திற்குக் காலம் திருத்தடப்படக்கூடிய வேறுஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டிருக்கும் என்பதுடன் அட்டைக்கான விண்ணப்பப்படிவத்தில் அவரின்/அவளின் கையொப்பத்தினை இடுவதன் மூலம் அட்டையின் மீது அவரின்/அவளின் கையொப்பத்தினை இடுவதன் மூலமும் அட்டவணையைப் பயன்படுத்துவதன் மூலமும் (விடயத்தினைப் பொறுத்து) அட்டை உடமையாளர் இவற்றினை முழுமையாக ஏற்றுக்கொண்டவராகிறார்.

2.2 அட்டையின் பயன்பாடு, அனைத்து ஏற்புடைத்தான சட்டங்கள், இலங்கையின் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பான ஒழுங்குவிதிகள், பிரயோகிக்கத்தக்க வேறுஏதேனும் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்திற்குக் காலம் செய்யப்படுகின்ற திருத்தங்கள் என்பனவற்றிற்கு கடுமையாக இணங்கியொழுகுதல் வேண்டும்.

2.3 அட்டை உடமையாளர் வர்த்தக அளவுகளில் பொருட்களை கொள்வனவு செய்யவோ அல்லது இறக்குமதி செய்யவோ அல்லது மூலதன கொடுக்கல்வாங்கல்களுக்கோ அட்டையை (அட்டைகளை) பயன்படுத்தக்கூடாது.

2.4 அவசியமான இலத்திரனியல் நிதிய மாற்றல்களுக்கு அல்லது வெளிநாட்டு நாணயத்தினை தன்னியக்கக்கூற்றுப் பொறியிலிருந்து எடுப்பனவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவை காலத்திற்குக் காலம் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டனவாகவும் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்கு மாத்திரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

2.5 செலாவணிக் கட்டுப்பாட்டாளரினதும் அத்துடன்/அல்லது காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபைகளினதும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அவற்றிலுள்ளவற்றை பின்பற்றுகின்ற விதத்தில் கொடுக்கல்வாங்கல் தகவல்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் தொடர்பான அதிகாரிகளுக்கு வெளிப்படுத்துமாறு வங்கி கேட்டுக்கொள்கிறது.

2.6 வங்கி, அடிப்படை அட்டையினை அத்துடன்/அல்லது ஏதேனும் துணை நிரப்பு அட்டையினை அடிப்படை அட்டை உடமையாளருக்கான அறிவித்தலுடன், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச்செய்யப்படும் நேரத்தில் நடைமுறையிலுள்ள வேறேதேனும் சட்டபூர்வ ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ளது என வங்கி நம்புவதற்கான காரணங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் இரத்துச்செய்யலாம்.

## 3. அட்டைச் சேவைகள்

அட்டை உடமையாளர் அட்டையைப் பெற்றுக்கொண்டதும் உடனடியாக அட்டையின் பின்புறத்தில் கையொப்பமிடல் வேண்டு என்பதுடன் அட்டையிலுள்ள கையொப்பம் விண்ணப்பப்படிவத்திலுள்ள கையொப்பத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அட்டை கைமாற்றத்தகாதது என்பதுடன் பயன்பாடு இவ்வுடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடிய மேலதிக நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

## 4. அட்டையின் விநியோகம்

அட்டைகள் பதிவுத்தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும் அல்லது அட்டை உடமையாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரொருவரிற்கான கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளப்படலாம். அடிப்படை அட்டை உடமையாளர் மற்றும் எவரேனும் துணை நிரப்பு அட்டை உடமையாளர் அட்டையினை (அட்டைகளை) பெறும்போது அவர்/அவள் அடையாளத்தினை நிரூபிக்கும் விதத்தில் சான்றினை வழங்குதல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படுகின்ற பொருள் கிடைத்தமைக்கான பற்றுச்சீட்டில் சரியாக கையொப்பமிட்டு உடனடியாக அனுப்பிவைத்தலும் வேண்டும்.

அட்டை உடமையாளர் அவரின்/ அவளின் தற்றுணிபின்படி, அவரின்/அவளின் சார்பில் அட்டடையினை (அட்டைகள்) ஏற்றுக்கொள்வதற்கு அல்லது சேகரிப்பதற்கு மூன்றாம் தரப்பினருக்கு எழுத்துமூலம் அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அட்டை உடமையாளரினால் அல்லது அவரின்/ அவளின் சார்பில் அதிகாரமளிக்கபட்ட ஆளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து அட்டையின் மீது உறப்படும் அனைத்து கட்டணங்களுக்கும் பொறுப்பாதலும் வேண்டும். வங்கி, வங்கியால் தீர்மானிக்கப்படக்கூடிய மூன்றாம் தரப்பினரிடம் அல்லது அதன் பிரதிநிதியிடம் அல்லது அட்டை உடமையாளரின் பிரதிநிதியாக இருக்கக்கூடியவரிடம் அட்டையினை கையளிப்பதற்கான தற்றுணிபினைக் கொண்டிருக்கும். அட்டை விநியோகிக்கப்பட்ட நேரத்திலிருந்து அட்டை மீது ஏற்படும் அனைத்து விதிப்புக்களுக்கும் அட்டை உடமையாளரே பொறுப்பாளியாதல் வேண்டும்.

## 5. அட்டையின் பயன்பாடு

5.1 அட்டை உலகளாவிய ரீதியில் செல்லுபடியாகக்கூடியதெனிலும், வங்கியும் சேவை நிறுவனங்களும் எந்தவொரு காரணத்திற்காகவும் அட்டையினை எந்தவொரு சேவை நிறுவனத்திலும் பயன்படுத்துவதனை மறுப்பதற்கான உரிமையினை தம்மகத்தே கொண்டுள்ளன. அட்டையினை நல்லெண்ண அடிப்படையில் தனிப்பட்ட நோக்கத்திற்காக அலல்து அலுவலக நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தமுடியுமேயன்றி, அட்டை உடமையாளரின் வியாபாரத்திற்காக வர்த்தக ரீதியான நன்மைகளை சுரண்டுவதற்கு

பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டது. சில சேவை நிறுவனங்களைப் பொறுத்தவரையில் உறப்படும் கட்டணங்கள் கொள்வனவு அல்லது ஏனைய வசதிகளுக்கான பயன்பாட்டு கட்டணங்களையும் உள்ளடக்கும் என்பது பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

5.2 அட்டை உடமையாளர் எல்லா நேரங்களிலும் அவரது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினையும் தொலைபேசி-தனிப்பட்ட அடையாள இலக்கத்தினையும் அட்டையிலிருந்து வேறாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் மற்றைய எந்தவொரு தனிப்பட்ட ஆளினாலும் பயன்படுத்தமுடியாதவாறு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தலும் வேண்டும். அட்டை உடமையாளர், ஒன்றில் அட்டை உடமையாளருக்கு தெரிந்தோ தெரியாமலோ அட்டையை அத்துடன்/அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கம் அத்துடன்/அல்லது தொலைபேசி-தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைப் பயன்படுத்திச் செய்யப்படும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

5.3 சேவை நிறுவனமொன்றில் அட்டையினைப் பயன்படுத்தும் போது, விதிப்புச் சீட்டில் கையொப்பமிடும் நேரத்தில் அட்டை உடமையாளர் விதிப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எது எப்படியெனினும், வங்கிகளினால் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்ட குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு காகிதத்திலமைந்த விதிப்புப் பற்றுச்சீட்டு வழங்கப்படமாட்டாது. அட்டை உடமையாளர் டிஜிட்டல் வங்கியின் வழிமுறையினூடாக (செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், Fri Mi போன்றவை) விதிப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினைப் பார்வையிடக்கூடியதாகவிருக்கும். இவ்வசதியைப் பயன்படுத்துவதற்காக அட்டை உடமையாளர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சாதாரணமாக, வங்கி ஏனைய கட்டண விதிப்புப் பற்றுச்சீட்டுக்களின் பிரதியை அட்டை உடமையாளருக்கு வழங்குவதில்லை. எனினும், வங்கியின் தற்றுணிபினைப் பொறுத்து வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான மேலதிகக் கொடுப்பனவு ஒன்றின் மீது பிரதிகள் வழங்கப்படலாம்.

5.4 வங்கி கொள்வனவிற்கு அஞ்சல் மூலமான அல்லது தொலைபேசி மூலமான கட்டளைகளை இணைப்பதனூடாக அல்லது கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான வசதிகளை அவருக்கு/அவளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விதத்தில் வழங்குவதற்கு இணங்கிக்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பங்களில் அட்டையினைப் பயன்படுத்தும் நேரத்தில் அட்டை உடமையாளர்களினால் கையொப்பமிடப்படமாட்டது. இதற்கமைய, அட்டை உடமையாளர் ஏதேனும் காரணத்திற்காகவும் அத்தகைய கொள்வனவு அல்லது விதிப்பு போன்ற உறுதித்தன்மை அல்லது செல்லுபடி தொடர்பாக ஏதேனும் பிணக்குகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்திலும்கூட, அட்டை உடமைளார் வெளிநிற்கும் தொகையினை தீர்ப்பனவு செய்ய உடன்படுகின்றார். அத்தகைய ஏதேனும் பிணக்குகள் அவற்றிற்கிடையேயானவையாக கருத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அட்டை உடமையாளரினாலும் குறிப்பிட்ட சேவை நிறுவனத்தினாலும் தீர்ப்பனவு செய்யப்படும் இது போன்ற ஏதேனும் விடயங்களுக்கு வங்கி பொறுப்பாகமாட்டாது.

5.5 அட்டையானது அதன் முகப்பில் பதிக்கப்பட்டுள்ள மாதத்தின் இறுதித்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பயன்படுத்தப்படல் வேண்டும்.

5.6 கீழேயுள்ள பிரிவு 30.3இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அடிப்படை அட்டை உடமையாளரினால் வங்கிக்கு அறிவித்தல் வழங்கப்படுகின்ற அத்தகைய நேரம்வரை அவரினால்/அவளினால் செய்யப்பட்ட ஒவ்வொரு அட்டை உடமையாளருக்கும் வழங்கப்படக்கூடிய அட்டைகளை புதுப்பித்தல் அத்துடன்/அல்லது பதில் அட்டைகளை வழங்குவது தொடர்பான நிலையியல் கோரிக்கையினை மேற்கொள்ளமுடியும் என்பதற்கு

அட்டை உடமையாளார் இணங்குகிறார். காலாவதியாதல், தொலைத்தல், சேதமடைதல், களவு போதல் தொடர்பில் அட்டை வசதிகளை புதுப்பிப்பதற்கான உரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுடிருக்கிறது. அத்தகைய புதுப்பித்தல் இடம்பெறாத சந்தர்ப்பத்தில் அட்டை உடமையாளர் வங்கிக்கு சேரவேண்டிய நிலுவையினை எவ்வித தயக்கமோ தாமதமோ இன்றி உடனடியாகத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

5.7 அட்டை (அட்டைகள்) மற்றும் வங்கியுடனான அனைத்து கையாளல் தொடர்பிலும் எல்லா நேரங்களிலும் நல்லெண்ணத்துடன் செயற்படுவதற்கு அட்டை உடமையாளர் பொறுப்பேற்றுக்கெள்கிறார்.

5.8 வங்கியினதும் அடிப்படை அட்டை உடமையாளருக்கான அறிவித்தலுடன் அதன் தற்றுணிபிற்கேற்ப கொடுகடன் எல்லையைக் குறைப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் அட்டை மீது அங்கீகாரமளிப்பதற்கான கோரிக்கையினை எந்தவொரு நேரத்திலும் மறுக்கலாம் அல்லது கௌரவிக்காமல்விடலாம். ஏதேனும் தொலைதல் அத்துடன்/அல்லது சேதம் அத்துடன்/அல்லது அத்தகைய இடைநிறுத்தல், மறுத்தல் அல்லது அட்டையின் வரையறையில் குறைப்பு அல்லது அட்டைக்கு அங்கீகாரமளிப்பதற்கான கோரிக்கை போன்றவற்றின் காரணமாக அட்டை உடமையாளரின் கீர்த்திக்கு பாதிப்பு ஏற்படுதல் என்பனவற்றின் விளைவாக தோன்றும் எந்தவொரு விளைவிற்கும் வங்கி பொறுப்பாகமாட்டாது.

## 6. அட்டையினை வெளிநாட்டில் பயன்படுத்தல்

அட்டை, சேவை நிறுவனங்களில் சர்வதேச ரீதியாக செல்லுபடியாகக்கூடியதாக இருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின்படி இதன் பயன்பாடு அதன் உரித்து அளவினை விஞ்சுமிடத்து, அப்பொழுது அட்டை உடமையாளர் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து தேவையான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளவதற்கு பொறுப்பேற்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகுதலும் வேண்டும். இருப்பினும், எந்தவொரு சூழ்நிலையிலும் கூற்றில் காட்டப்பட்டுள்ளவாறான நிலுவைத்தொகையின் மீள்கொடுப்பனவினை தாமதிக்கவோ அல்லது மிகையான எடுப்பனவு எனக் காரணம் காட்டி மறுக்கவோ கூடாது.

## 7. அட்டை உடமையாளர் வெளிநாட்டிற்குச் செல்லுதல்

நிரந்தரத் தொழிலின் நிமிர்த்தம் புலம்பெயர்கின்ற அத்துடன்/அல்லது வெளிநாட்டிற்குச் செல்கின்ற அட்டை உடமையாளரொருவர் அல்லது அந்நேரத்தில் நடைமுறையிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு ‘‘வதிவற்றவர்’’ எனக் கருதப்படுமொருவர் அதுபற்றி வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அனைத்து பட்டியற்படுத்தப்பட்ட அல்லது பட்டியற்படுத்தப்படாத கட்டணங்களையும் தீர்ப்பனவு செய்தல் வேண்டும் என்பதுடன் அடிப்படை அட்டையினையும் ஏதேனும் துணை நிரப்பு அட்டைகளையும் கையளித்தலும் வேண்டும் (ஏற்புடைத்தானவாறு).

## 8. வதிவற்ற இலங்கையாளர்களுக்கான அட்டை

வதிவற்ற இலங்கையர்கள் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட தற்போதைய வழிகாட்டல்களின்படி அட்டைகளை வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் அத்தகைய சந்தர்ப்பமொன்றில், அட்டை உடமையாளர் அடிப்படை அட்டையினையும் ஏதேனும் துணைநிரப்பு அட்டையினையும் (ஏற்புடைத்தானவாறு) வங்கிக்கு திருப்பி அனுப்புதல் வேண்டும்.

## 9. வெளிநாட்டவர்களுக்கான அட்டைகள்

வெளிநாட்டவரான அட்டை உடமையாளரொருவர் இலங்கையில் வதியுமொருவராக இருப்பின் அவர்/அவள் அட்டையினைப் பயன்படுத்தலாம். அத்தகைய வெளிநாட்டைச் சேர்ந்த அட்டை உடமையாளர் நிரந்தரமாக நாட்டைவிட்டு செல்வதாயின் அவர்/அவள் செல்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக அத்துடன்/அல்லது அவரின் வதிவிட விசா காலாவதியாவதற்கு ஒரு மாதம் முன்னதாக வங்கிக்கு எழுத்தில் அதுபற்றி அறிவித்தல் வேண்டும். அவர்/அவள் பட்டியற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியற்படுத்தப்படாத கட்டணங்களை முழுமையாக தீர்ப்பனவு செய்தல் வேண்டும் என்பதுடன் அட்டையினை (அட்டைகளை) மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு முன்னதாக வங்கியிடம் கையளித்தலும் வேண்டும்.

## 10. வெளிநாட்டு நாணயத்தின் கட்டணங்கள்

10.1 இலங்கை ரூபா தவிர்ந்த நாணயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றல் செய்யப்பட்ட பின்னர் அட்டைக் கணக்கிற்கு பற்று வைக்கப்படுகிறது.

10.2 ஐக்கிய அமெரிக்க டொலர்களில் செய்யப்படுகின்ற அனைத்து வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களும் வங்கியினால் பேணப்படுகின்ற அப்போது நிலவுகின்ற ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றல் செய்யப்படுகிறது. ஐ.அ.டொலர் தவிர்ந்த வெளிநாட்டு நாணயங்களில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பட்டியற்படுத்தப்படுகின்ற நாணங்களுக்கு மாற்றப்படுகின்றமைக்கு முன்னதாக மாஸ்டர் அட்டையின் மூலம் ஐ.அ.டொலருக்கு மாற்றப்படும். உள்நாட்டுச் செலாவணி வீத அசைவுகளைத் தணிக்கும்பொருட்டு, பட்டியல்படுத்துகின்ற நேரத்திலுள்ள வீதங்களுடன் மேலதிகத் தொகையொன்று (2.5 சதவீதம் வரை) கூட்டப்படும்.

## 11. காசு முற்பணங்கள்

11.1 தன்னியக்கப்படுத்தப்பட்ட கூற்றுப்பொறிகள், வங்கிக் கிளைகள், காசு விநியோகிக்கின்ற வணிகர்கள், முகவர்கள் அல்லது வங்கியின் டிஜிட்டல் மார்க்கங்களூடாக அட்டை உடமையாளரினால் பெறப்பட்ட காசு முற்பணங்கள் தன்னிக்கக்கூற்றுப் பொறி, வங்கி, வணிகர், முகவர், உள்நாட்டு அல்லது நாட்டு வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாக இருக்கும். மத்திய வங்கி மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளும் ஏற்புடைத்தாகும். வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை அவர்/அவள் பயன்படுத்தினாலொழிய அட்டையின் மூலம் தன்னியக்கக் கூற்றுப்பொறிகளிலிருந்து காசு முற்பணங்களை அட்டை உடமையாளரினால் பெறமுடியாது.

11.2 அட்டை உடமையாளரொருவரினால் காசு முற்பண வரையறை வரை காசு முற்பணங்களை பெற்றுக்கொள்ளமுடியும். தற்காலிக கொடுகடன் வரையறையின் அதிகரிப்பு அத்துடன்/அல்லது காசு வைப்புக்கள் அல்லது அட்டைக் கணக்குகளுக்கான நிதிய மாற்றல்கள் எவ்வழியிலேனும் காசு முற்பணங்களின் வரையறையினை அதிகரிக்காது.

11.3 இவ்வசதியை, அடிப்படை அட்டை உடமையாளருக்கான அறிவித்தலுடன் வங்கியினால் மாற்றமுடியும் அல்லது புறக்கீடு செய்யமுடியும்.

## 12. கொடுகடன் வரையறை

அட்டையுடன் சேர்த்து அனுப்பப்படுகின்ற விளக்கக்கடிதம் அதேபோன்று கூற்றுக்கள் அட்டைக் கணக்கிற்கு ஏற்புடைத்தான ஆரம்ப கொடுகடன் வரையறையினைக் காட்டும். அட்டை உடமையாளர்

கொடுகடன் வரையறையினை நிர்ணயிப்பதற்கு வங்கிக்கு இணக்கப்பாட்டினையும் அதிகாரத்தினையும் வழங்குவதுடன் காலத்திற்குக் காலம் அடிப்படை அட்டை உடமையாளருக்கான அறிவித்தலொன்றுடன் வரையறையை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம். நடைமுறை மீதி கொடுகடன் வரையறையினை விஞ்சுமாயின் அட்டை உடமையாளர் விஞ்சிய ஏதேனும் தொகையினை கொடுப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கடன் வரையறை விஞ்சப்படுமாயின் வரையறையை விஞ்சியமைக்கான விதிப்பு காலத்திற்குக் காலம் ஏற்புடைத்தானவாறு கொடுகடன் வரையறையினை விஞ்சிய தொகையினைக் கருத்திற்கொள்ளாது அட்டைக் கணக்கின் மீது விதிக்கப்படும்.

**13. அட்டைகள் காலாவதியாதல்**

அட்டை அதன் முகப்பில் அச்சிடப்பட்டுள்ள காலாவதியாகும் திகதி வரை செல்லுபடியாகும். அட்டையின் செல்லுபடியாகும் காலத்தினைப் புதுப்பிப்பது பிரிவு 5.6இல் தரப்பட்டவாறு இருக்கும்.

**14. அட்டை வங்கியின் சொத்தாக தொடர்ந்தும் இருக்கும்**

அட்டை தொடர்ந்தும் வங்கியின் சொத்தாக இருக்கும். அடிப்படை அட்டை உடமையாளர் அல்லது எவரேனும் துணை நிரப்பு அட்டை உடமையாளர் இதனைப் பயன்படுத்துவதனை எந்தவொரு நேரத்திலும் திரும்பப்பெறுவதற்கான உரிமையினை வங்கி கொண்டிருக்கும். வங்கி, அடிப்படை அட்டை உடமையாளருக்கான அறிவித்தலுடன் இவ்வுரிமையினை புரியமுடியும். வங்கி திரும்பப்பெற்றுக்கொண்ட அட்டைகளை ''இரத்துச்செய்யும் செய்தித்திரட்டு'' பட்டியற்படுத்தும் அல்லது சேவை நிறுவனங்களுக்கு அட்டை திரும்பப்பெறப்பட்டுள்ளமை அல்லது இரத்துச்செய்யப்பட்டுள்ளமை பற்றி அறிவிக்கும். வங்கி அட்டையினை திரும்பப்பெற்றிருக்குமாயின் அட்டை உடமையாளர் இதனை வங்கிக்கு திரும்ப அனுப்புதல் வேண்டும். அத்துடன் சேவை நிறுவனம் காலாவதியான அல்லது திரும்பப்பெறப்பட்ட அட்டையினை கையளிக்குமாறு அட்டை உடமையாளரைக் கேட்குமிடத்து அட்டை உடமையாளர் அவ்வாறே செய்தல் வேண்டும். அட்டை உடமையாளர் அட்டை காலாவதியான பின்னர் அல்லது திரும்பப்பெறப்பட்டதன் பின்னர் அதனைப் பயன்படுத்தவேகூடாது. அட்டை காலாவதியான பின்னர் அல்லது திரும்பப்பெறப்பட்ட பின்னர் உறப்படும் அனைத்துக் கட்டணங்களுக்கும் அட்டை உடமையாளரே தொடர்ந்து பொறுப்பாவார். திரும்பப்பெறுதல், மீள உடமையில் கொள்ளுதல் அல்லது அட்டையினை திரும்ப ஒப்படைக்குமாறு கோருதல் என்பன அட்டை உடமையாளரின் பண்புகளின் மீது அல்லது கொடுகடன் நம்பகத்தன்மையின் மீது எவ்வித பிரதிபலிப்புக்களையும் கொண்டிருக்கக்கூடாது என்பதுடன் அட்டையினை திரும்ப ஒப்படைக்குமாறு அல்லது கையளிக்குமாறு எவரேனுமாளினால் செய்யப்படும் ஏதேனும் கூற்றுக்களுக்கு வங்கி எவ்விதத்திலேனும் பொறுப்பாகமாட்டது. மேலும், அட்டையுடன் இணைக்கப்பட்டிருக்கும் சிறப்புரிமைகள் மற்றும் வசதிகளை எந்தவொரு நேரத்திலும் அடிப்படை அட்டை உடமையாளருக்கான அறிவித்தலுடன் புறக்கீடு செய்வதற்கான தற்றுணிபினை வங்கி கொண்டுள்ளது.

**15. கட்டணங்கள்**

15.1 அட்டை உடமையாளர் வங்கியின் கோரிக்கையினை உடனடுத்து, அட்டை வழங்கப்படும் வேளையில் வங்கியினால் விபரிக்கப்பட்டவாறு இணைந்துகொள்கின்ற கட்டணங்களையும் ஒவ்வொரு துணை நிரப்பு அட்டைகளுக்குமாக அது வடிவமைக்கப்படும் போது வங்கியினால் விபரிக்கப்படுகின்ற இணைந்துகொள்கின்ற கட்டணத்தினையும் வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட தீர்வைப் புத்தகத்தில் காணப்படுகின்றவாறு செலுத்துவதற்கு அட்டை உடமையாளர் இணங்குகின்றார்.

15.2 அட்டை உடமையாளருக்காக அட்டைக் கணக்கொன்றினைப் பேணுவதற்காக ஆண்டுக் கட்டணமொன்றினை அட்டை உடமையாளர் வங்கிக்குச் செலுத்தல் வேண்டும் (அட்டை பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பதனை கருத்திற்கொள்ளாமல்) ஆண்டுக் கட்டணம்

அடிப்படை அட்டை உடமையாளருக்கு வங்கி அறிவித்த அத்தகைய வீதத்தில் முன்கூட்டியே பட்டியற்படுத்தப்பட்டிருக்கும்.

15.3 அட்டை வெளிநாட்டு முகவரிக்கு கூரியர் மூலம் அனுப்பப்படும் வேளையில் வங்கி, அட்டைக் கணக்கில் கையாளல் கட்டணத்தினைப் பற்று வைக்கும்.

15.4 வரையறையை அதிகரிப்பதற்கான கையாளல் கட்டணமொன்றும் அட்டைக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும்.

15.5 கூற்றுக்களின் பிரதிகளுக்கான கையாளல் கட்டணமொன்றும் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

15.6 கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய திகதியில் மொத்த வெளிநின்ற தொகையினையும் தீர்ப்பனவு செய்வதற்கு அட்டை உடமையாளர் தவறுவாராயின் கூற்றுத் திகதியிலுள்ளவாறான மொத்த வெளிநின்ற நிலுவையின் மீது வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாள வீதத்தில், பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்கு நாளாந்த நிலுவையின் மீது கணிக்கப்பட்ட நிதிக் கட்டணமொன்று சேர்க்கப்படும். நிதிக் கட்டணம் அட்டைக் கணக்கில் அடுத்துவரும் கூற்றுத் திகதியில் பற்று வைக்கப்படும்.

15.7 மேலேயுள்ள 15.6ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கட்டணங்களின் கொடுப்பனவிற்கு பாதிப்பேதுமில்லாமல், அட்டை உடமையாளர் செலுத்தவேண்டிய குறைந்தபட்சக் கொடுப்பனவினை/கொடுப்பனவு செலுத்தவேண்டிய திகதியில் சேரவேண்டிய மொத்த குறைந்தபட்சக் கொடுப்பனவினைச் செலுத்தத் தவறுவாராயின் காலதாமதக் கொடுப்பனவுக் கட்டணமொன்று விதிக்கப்பட்டு, வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விதத்தில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

15.8 அட்டை உடமையாளரினால் அல்லது வேறு எவரேனும் தரப்பினரால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும் அல்லது வழங்கப்படும் ஏதேனும் காசோலைகள் அல்லது வேறேதேனும் கொடுப்பனவுக் கட்டளைகள் ஏதேனும் காரணங்களுக்காக மறுக்கப்படுமாயின் வங்கி கையாளல் கட்டணமாக அட்டை உடமையாளர் மீது கட்டணமொன்றினை விதித்து வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விதத்தில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். இக்கட்டணம், வங்கியினால் விதிக்கப்படக்கூடிய ஏதேனும் அஞ்சல் கட்டணங்களுக்கும் புறம்பானதாகும்.

15.9 அனைத்து காசு முற்பணங்கள் மீதும் காசு முற்பணக் கட்டணம் அத்துடன்/அல்லது கையாளல் கட்டணம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விதமொன்றில் விதிக்கப்பட்டு அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். பயணிகள் காசோலை, கேள்வி வரைவுகள், தந்தி மாற்றல்கள் போன்ற உடனடியாக காசாக மாற்றத்தக்க ஏதேனும் சாதனங்களின் கொள்வனவுகள் காசு முற்பணமாகக் கருதப்பட்டு மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு உட்படுத்தப்படும்.

15.10 பட்டியல்படுத்தப்படும் காலப்பகுதியில் எந்தவொரு நேரத்திலும் ஒதுக்கப்பட்ட கொடுகடன் வரையறை விஞ்சப்படுமாயின் மேலதிக வரையறைக் கட்டணமானது விதிக்கப்பட்டு அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். இது, பட்டியற்படுத்தப்படும் காலப்பகுதியில் வதிக்கப்படுகிறது. கணிக்கின்ற நோக்கத்திற்காக ஒன்றில் கொடுகடன் வரையறை விஞ்சப்பட்டிருக்கின்றதோ இல்லையோ ஏதேனும் வங்கி விதிப்புக்களின் தொகை பரிசீலனையில் கொள்ளப்படும்.

15.11 இலங்கையிலுள்ள பெற்றோல் நிலையங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள பெற்றோல், டீசல், வாயு மற்றும் ஏனைய வழங்கல்களின் கொள்வனவுகள் கையாளல் கட்டணத்திற்கு உட்படிருக்கும் என்பதுடன் இது வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானதொரு வீதத்தில் அட்டைக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும்.

15.12 விற்பனைகள்/ காசு முற்பண வரைவுகளின் போட்டோ பிரதிகளுக்கான மீட்புக் கட்டணம் வங்கியினால் தீர்மானிக்கக்கூடியவாறானதொரு வீதத்தில் வங்கிக் கணக்கில் பற்று வைக்கபப்டும்.

15.13 காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடிய ஏதேனும் நியதிக் கட்டணம்/ கட்டணங்கள் அது/அவை ஏற்புடைத்தானவாகமாறும் போது காலத்திற்குக் காலம் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

15.14 அட்டைக்குப் பிரயோகிக்கத்தக்க நிதியியல் விதிப்புக்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் விபரங்களும் அதன் பயன்பாடும் வங்கியினால் பிரசுரிக்கப்படும் தீர்வைப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் இதன் பிரதிகள் வங்கியின் இலங்கையிலுள்ள எந்தவொரு கிளையிலும் வங்கியின் அட்டை நிலையங்களிலும் கிடைக்கத்தக்கதாகவுள்ளதுடன் அல்லது வங்கியின் கூட்டாண்மை வெப்தளமான www.nationstrust.com இல் கிடைக்கத்தக்கதாக இருக்கும். அனைத்து விதிப்புக்கள், கட்டணங்கள், வட்டி வீதங்கள், தண்டங்கள் மற்றும் வரையறைகள் என்பன அறிவித்தலுடன் வங்கியின் தற்றுணிபிற்கேற்ப மாற்றத்திற்கு உள்ளாகும் என்பதுடன் தீர்வைக்கான ஏதேனும் அத்தகைய மாற்றங்கள்/கூட்டுதல்கள் அடிப்படை அட்டை உடமையாளருக்கு கூற்றுக்கள் அல்லது அத்தகை மாற்றங்கள் கூட்டுதல்கள் இலங்கையிலுள்ள ஒன்று அல்லது அதற்கு கூடுதலான செய்தித்தாள்களில் பிரசுரிப்பதன் மூலம் அல்லது வங்கியின் கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் இடுவதன் மூலம் அறிவிக்கப்படும்.

15.15 அட்டை உடமையாளரின் கோரிக்கையினை நிறைவேற்றும் விதத்தில் மேற்கொள்ளப்படும் மேலதிக சேவைகளுக்காக கட்டணத்தினை விதிக்கும் உரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளதுடன் அட்டைக் கணக்கில் அத்தகைள விதிப்புக்கள் பற்று வைக்கப்படும்.

15.16 காலத்திற்குக் காலம் வங்கியினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் கட்டணக் குறைப்புக்கள் அல்லது தள்ளுபடிகள் அடிப்படை அட்டை உடமையாளர்களுக்கான அறிவித்தலுடன் எந்தவொரு நேரத்திலும் வங்கியினால் புறக்கீடு செய்யப்படுவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கான தற்றுணிபினை வங்கி கொண்டுள்ளது. வங்கி அதன் சொந்த தற்றுணிபின்படி, அட்டையின் வகை அல்லது சூழ்நிலையினைப் பொறுத்தும் சில விதிப்புக்களிலிருந்து விலக்களிக்கலாம்.

## 16. விமான நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

அட்டையினைப் பயன்படுத்தி விமான பயணச்சீட்டுக்களை ஒதுக்கும் போது அட்டை உடமையாளர் ஏதேனும் மேலதிக கட்டணங்களுக்குட்பட்டு பயணச்சீட்டுக்களின் கொள்வனவிற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைத்தானவிடத்து அவை கூற்றில் பட்டியற்படுத்தப்படவும் வேண்டும். அதனைத்தொடர்ந்து இரத்துச்செய்யப்படும் ஏதேனும் பயணச் சீட்டிற்கான தொகை, சேவை நிறுவனத்திடமிருந்து வங்கியினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற தொகை அட்டைக் கணக்கிற்கு (இரத்துச்செய்தமை தொடர்பான கட்டணங்கள் கழித்து) வரவு வைக்கப்படும்.

## 17. பிணக்குகள்

அட்டை தொலைந்து, களவாடப்பட்டு அது பற்றி பிரிவு 24இன்படி வங்கிக்கு சரியான முறையில் தகவலளிக்கப்பட்டிருந்தாலொழிய, கொடுப்பனவிற்காக சேவை வழங்குநரிடமிருந்து வங்கியினால் பெறப்பட்ட ஏதேனும் விதிப்பு அல்லது வேறு கொடுப்பனவுக் கோரிக்கைகள், அத்தகைய கோரிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட விதிப்புக்களின் தொகை சேவை நிறுவனங்களினால் சரியான முறையில் உறப்பட்டவை என்பதும் விடயங்களைப் பொறுத்து அட்டை உடமையாளரினால் குறிப்பிடப்பட்ட விதிப்புக்களும் சரியான முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கான முடிந்தமுடிவான சான்றுகளாக இருத்தல் வேண்டும். அட்டை மோசடியான முறையில் பயன்படுத்தப்பட்டது என்பதனை நிரூபிக்கின்ற பொறுப்பு அட்டை உடமையாளரை சார்ந்ததாக இருத்தல் வேண்டும். இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவிற்கான கோரிக்கை அட்டையைப் பயன்படுத்தியதன் மூலம் சேவை நிறுவனங்களில் அட்டை உடமையாளரினால் உறப்பட்ட அனுமதிக்கத்தக்க செலவினங்கள் தொடர்பான ஏதேனும் மற்றும் எல்லாக் கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். நானாவிதமான சுற்றுலா விடுதிக் கட்டணங்கள் போன்ற கட்டணங்களாகப் பதிவு செய்யப்படாது. அட்டை உடமையாளரினால் உறப்பட்ட பொறுப்புக்களின் அளவினால் வங்கிக்கு அட்டை உடமையாளருக்குமிடையிலான முடிவான சான்றாக இருக்கவேண்டும் என்பதனால் கட்டணம் தொடர்பான பற்றுச்சீட்டில் அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்டு அட்டை உடமையாளரின் கையொப்பமும் காணப்படுமிடத்து அட்டை உடமையாளர் கொள்வனவு செய்யப்பட்ட/ கொள்வனவு செய்யப்படவுள்ள பொருடகளை சரியாக பெற்றிருக்கின்றார் அல்லது அட்டை உடமையாளர் திருப்திப்படுமளவிற்கு சேவைகள் சரியான முறையில் பெறப்பட்டுள்ள அல்லது பெறப்படவுள்ளன என்பது தொடர்பில் நிரூபிக்குமாறு வங்கி கேட்டுக்கொள்ளாது. கூற்றில் குறிப்பிட்டுள்ள விதிப்புக்களுடன் அட்டை உடமையாளர் இணங்கவில்லையாயின் அதுபற்றி கூற்று பெறப்பட்ட 20 நாட்களுக்குள் வங்கிக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அனைத்துக் கட்டணங்களும் கூற்றுக்களும் முழுமையாக ஒழுங்கில் இருப்பதாக பொருள்கோடப்படும். இணங்கிக்கொள்ளாமை தொடர்பான அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் இக்கூற்றுக்கள் மீது குறிப்பிட்டுள்ள ஏற்புடைத்தான கட்டணத்துடன் இணங்கிக்கொள்ளாமை தொடர்பான அட்டை உடமையாளரின் மனக்குறையினை தீர்ப்பதற்கு நல்லெண்ணத்துடன் வர்த்தக ரீதியாக நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய முயற்சிகளின் பின்னர் கூற்றுக்களின் மீது காட்டப்பட்டுள்ள விதிப்புக்கள் சரியானவை என வங்கி தீர்மானிக்குமாயின், அப்பொழுது இது அதனை அட்டை உடமையாளருக்கு விதிப்பு பற்றுச்சீட்டின் பிரதி அல்லது கொடுப்பனவு கோரிக்கையின் பிரதியொன்று உட்பட மற்றைய விபரங்களுடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். அட்டை உடமையாளர் அதன் பின்னர் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு எவ்வித தயக்கமுமில்லாதமல் வட்டி மற்றும் வேறுஏதேனும் பிரயோகிக்கத்தக்க கட்டணங்களைச் செலுத்தவேண்டும் என்பதுடன் வங்கி, வங்கிக்குச் சேரவேண்டிய அத்தகைய கொடுப்பனவுகளை அறிவிடுவதற்கும் உரித்துடையதாக இருக்கும். அட்டை உடமையாளர் பிணக்குகளுக்குள்ளான கொடுக்கல்வாங்கல்களின் காரணமாக ஏற்படும் மீளாய்வு அல்லது மாற்றுதல் உட்பட கொடுக்கல்வாங்கலொன்றினை இரத்துச்செய்தல், மாற்றுதல் அல்லது மீளளித்தலின் விளைவாகத் தோன்றுகின்ற ஏதேனும் செலாவணி இழப்புக்களுக்கு பொறுப்பாளியாதல் வேண்டும்.

## 18. அட்டையை மறுத்தல்

எந்தவொரு குறிப்பிட்ட சேவை நிறுவனத்தினாலும் அட்டை மதிக்கப்பட வேண்டும் என்பதற்கு வங்கி உத்தரவாதம் வழங்கமுடியாது என்பதுடன் அட்டையை மதிப்பதற்கு எந்தவொரு சேவை நிறுவனமும் மறுப்பதற்கான பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளாது.

## 19. பெயர் மற்றும் முகவரியை மாற்றுதல்

அட்டை உடமையாளர் பிரிவு 30.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பெயர் மற்றும் முகவரியில் ஏற்படும் ஏதேனும் மாற்றம் பற்றி வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

## 20. பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம்

அட்டை உடமையாளரினால் அஞ்சல் கட்டளை மூலம் செய்யப்படும் பொருட்களின் விநியோகத்தில் காணப்படும் தாமதம், விநியோகிக்கப்படாமை, மற்றும் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படாமை அல்லது பழுதடைந்த பொருட்களை பெற்றுக்கொள்ளுதல் என்பன போன்றவை உட்பட சேவை நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படும் அல்லது கிடைக்கும் வணிகப் பொருட்களின் உத்தரவாதம் அல்லது சேவைகளுக்கு எந்தவிதத்திலேனும் வங்கி பொறுப்பாகமாட்டாது. அட்டை வசதி என்பது பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வெறுமனே ஒரு வசதியே என்பதனை மிகத்தெளிவாகப்புரிந்து கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் வங்கியின் தரம், அளவு, விநியோகம் எவ்விதத்திலேனும் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவத்தினையோ கொண்டிருக்காது என்பதுடன் அட்டை உடமையாளரே சேவை நிறுவனத்துடனான பிணக்குகளை தீர்த்துக்கொள்ளுதலும் வேண்டும். பிணக்கொன்று உள்ளதானது வங்கி அட்டை உறுப்பினரை விடுவிக்காது என்பதுடன் பிணக்கு அல்லது எத்தகையதுமான உரிமைக்கோரிக்கை முடிவுறாதுள்ள நிலையில் வங்கிக்கான அவரது எவையேனும் ஆட்சேபனைகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய விதிப்பனவுகளை உடனடியாகச் செலுத்துவதற்கும் உடன்படுகின்றார்.

## 21. அட்டை உடமையாளர்களுக்கான காப்புறுதிப் பாதுகாப்பு

வங்கி அதன் தற்றுணிபிற்கேற்ப, அட்டை உடமையாளருக்கு காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட காப்புறுதிச் சாதனங்களை வழங்குகிறது. எனினும், அத்தகைய காப்புறுதி மீதான ஏதேனும் கோரல்களை அத்தகைய காப்புறுதியை வழங்குகின்ற காப்புறுதிக் கம்பனிகளுடன் நேரடியாக மேற்கொள்ளுதல் வேண்டும். வங்கி ஏதேனும் காப்புறுதிக் கொடுப்பனவுகளை செலுத்தாமல் விடுவதற்கோ அல்லது அத்தகைய காப்புறுதியிலிருந்து எழுகின்ற வேறேதேனும் பிணக்குகளுக்கோ வங்கி பொறுப்பாகமாட்டது என்பதுடன் அத்தகைய ஏதேனும் பிரச்சனைகளை அட்டை உடமையாளரும் காப்புறுதிக் கம்பனியும் தீர்த்துக்கொள்ளுதல் வேண்டும். அனைத்து ஏற்புடைத்தான காப்புறுதி பற்றிய தகவல்களை வங்கி காலத்திற்குக் காலம் வழங்கியிருக்கிறது. இதனை வங்கியின் தற்றுணிபிற்கேற்ப திருத்தியமைக்கமுடியும் அல்லது மாற்றியமைக்கமுடியும். காப்புறுதிக் கம்பனியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு வேறுபட்ட காப்புறுதிப் பூட்கைகளுக்கு தனியான நியதிகளையும் நிபந்தனைகளையும் பிரயோகிக்கமுடியும். நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய காப்புறுதிப் பூட்கைகளை கோரிக்கையின் பேரில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

## 22. பொறுப்பினை விலக்கிக்கொள்ளுதல்

1. பின்வருவனவற்றிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தோற்றுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் வங்கி அட்டை உடமையாளருக்கு எவ்விதத்திலேனும் பொறுப்பாகமாட்டாது.
   - அ. ஏதேனும் பொருட்களில் அல்லது பணிகளினால் வழங்கப்படும் சேவைகளில் காணப்படும் குறைபாடு;
   - ஆ. அட்டையை மதிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு எவரேனும் ஆள் மறுப்பது;
   - இ. ஏதேனும் கணனி முனைக்கோடியில் அத்துடன்/அல்லது இலத்திரனியல் தரவு எந்திரத்தின் தவறான தொழிற்பாடு;
   - ஈ. அட்டை உடமையாளர் தவிர்ந்தவர்களினால் வழங்கப்படும் கொடுக்கல்வாங்கல் அறிவுத்தல்கள்;
   - உ. அட்டையினை திரும்ப வழங்குமாறு கோருகின்ற எவரேனுமாளினால் செய்யப்படுகின்ற ஏதேனும் அறிக்கை அல்லது அத்தகைய கோரிக்கையுடன் இணைந்தவிதத்தில் எவரேனுமாளினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கை;

ஊ. வங்கியின் குறித்துரைக்கப்பட்ட ஊழியர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களிடம் அட்டை உடமையாளரினால் அட்டை கைளிக்கப்படுவது;

எ. அட்டையின் முகப்பில் பொறிக்கப்பட்டுள்ள காலாவதியாகும் திகதிக்கு முன்னதாக அட்டடையினை கையளிக்குமாறு கோருகின்ற அல்லது கேட்டுக்கொள்வதற்கான அதன் உரிமையினைப் புரிகின்ற விதத்தில் வங்கியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை, ஒன்றில் அத்தகைய கோரிக்கையும் கையளிப்பும் செய்யப்படுகின்றமை அத்துடன்/அல்லது நேரடியாக வங்கியினால் அல்லது சேவை நிறுவனத்தினூடாக அல்லது வங்கியின் முகவரூடாக நேரடியாக பெறப்படுகின்றமையாயினும் சரி;

ஏ. ஏதேனும் அட்டையை அல்லது அட்டைக் கணக்கினை முடிவுறுத்துவதற்காக அதன் உரிமையினை வங்கி புரிகின்றமை;

ஐ. அட்டையினை மீள உடமையில் கொள்ளுதல் அத்துடன்/அல்லது அதனை திரும்ப வழங்குமாறான கோரிக்கை அல்லது ஏதேனும் சேவை நிறுவனம் அட்டையினை கௌரவிக்க அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்தல் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டதாகக் கூறப்படுவது தொடர்பில் விண்ணப்பதாரி அல்லது அட்டை உடமையாளரின் கொடுகடன் பண்புகளுக்கு அல்லது கீர்த்திக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் களங்கம்;

ஒ. 23ஆம் பிரிவிற்கிணங்க வங்கியினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் விபரங்களில் காணப்படும் ஏதேனும் தவறான கூற்றுக்கள், தவறானசித்தரிப்பு வழு அல்லது தவறுகள்.

ஓ. ஏதேனும் காரணத்திற்கான விதிப்பொன்றினை மறுத்தல்.

2. அட்டை உடமையாளரிடமிருந்து வரவேண்டிய வெளிநின்ற தொகையினை தீர்ப்பனவு செய்யுமாறு ஒன்றில் வங்கியினால் அல்லது வங்கியின் சார்பில் செயற்படுகின்ற எவரேனுமாளினால் கேட்கப்படுகின்ற அல்லது கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அட்டை உடமையாளர் அவ்வாறு கேட்டுக்கொள்வது அல்லது கோருவது அவதூறாக அல்லது ஏதேனும் விதத்தில் அட்டை உடமையாளரின் பண்புகளுக்கு தீங்கு பயக்கும் நடவடிக்கையொன்றாக அதனை கருதப்படக்கூடாது என்பதற்கு இணங்குவதுடன் அதனை ஏற்றுக்கொள்கிறார்.

3. மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர் அத்துடன்/அல்லது அத்தகைய மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரின் ஒப்பந்ததாரிகளினால் வழங்கபப்டும் பல்வேறு சேவைகளுக்கான தொடர்பூட்டல் மற்றும் ஏற்பாடுகளுக்காக அத்தகைய மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரால் அல்லது வங்கியினால் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. பயன்படுத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் அனைத்து சேவைகளினதும் செலவிற்கு அட்டை உடமையாளர் பொறுப்புடையவராவார். சிறந்த மற்றும் முயற்சியின் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுவதுடன் நேரம், தூரம் அல்லது அமைவிடம் போன்ற பிரச்சனைகளின் காரணமாக அவை கிடைக்காமலும் போகலாம். காப்புறுதி, மருத்துவம் அத்துடன்/அல்லது ஆலோசனை வழங்கும் சட்ட தொழில்சார் நிபுணத்துவம் அத்துடன்/அல்லது மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்களினால் குறித்துரைக்கப்பட்டவர்கள் அவர்களது ஊழியர்களோ அல்லது மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்களது அல்லது ஒப்பந்ததாரர்களின் ஊழியர்களோ அல்ல. ஆகவே, அவர்கள் ஏதேனும் காப்பறுதி, மருத்துவம், சட்டம் அல்லது வேறு ஏதேனும் சேவைகள், கிடைப்பனவு, பயன்பாடு, செயல், தவறுகள் அல்லது விளைவுகளுக்குப் பொறுப்பாகமாட்டார்கள். வங்கியானது வழங்கப்பட்ட சேவைகளின் ஏற்பாடுகள் அல்லது பயன்பாட்டுத் தன்மை எதுவாயினும் பொறுப்பாண்மை அல்லது பொறுப்பினை அல்லது மேலே குறிப்பிட்ட தரப்பினரின் செயற்பாடு அல்லது தவறுகளை ஏற்றுக்கொள்ளாது.

## 23. தகவல்களை வெளிப்படுத்தல்

இதனகத்துப்பின்னா், 23ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள விடயத்திற்கு உட்பட்டு, வங்கி, கொடுக்கல்வாங்கல்களின் அனைத்து விபரங்களினதும் அல்லது அட்டை உடமையாளர்களுக்கும் வங்கிக்குமிடையிலான வணிகங்களினதும் இரகசியத்தன்மையினை சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அளவிற்கு பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். முன்னா் மேலே குறிக்கப்பட்டவை எவை எப்படியிருப்பினும் அட்டை உடமையாளா் பற்றிய தகவல்களையும் அட்டைக் கணக்கு தொடர்பிலான தகவல்களையும் பின்வருவோருக்கு வழங்குவதற்கு வங்கிக்கு அங்கீகாரமளிக்கின்றார்.

- அ. ஏதேனும் வங்கி அல்லது நிதியியல் நிறுவனங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம், அல்லது செலுத்தத்தவறிய வாடிக்கையாளர்களின் கொடுகடன் பணியகம் அல்லது தரவுத்தளத்தினை முகாமைப்படுத்துகின்ற பொதுவான சேவைவழங்குநா்கள்;
- ஆ. வங்கியின் ஏதேனும் உண்மையான அல்லது முன்மொழியப்பட்ட வங்கியின் பொறுப்பேற்பவர் அல்லது பங்கேற்பாளா் அல்லது துணைப் பங்கேற்பாளா் அல்லது இவ்வுடன்படிக்கை தொடா்பில் அல்லது அட்டைக் கணக்கு தொடா்பில் வங்கியின் ஏதேனும் உாிமை மாற்றத்தினைப் பெற்றவா்கள்;
- இ. வங்கிக்கான இரகசியத்தன்மை கடமையின் கீழுள்ள எவரேனும் முகவா், ஒப்பந்ததாரா் அல்லது சேவை வழங்குநா் அல்லது ஏதேனும் தொடா்பான கம்பனி;
- ஈ. ஏதேனும் மேற்பார்வை அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை;
- உ. இலங்கையின் சட்டத்திற்கிணங்க நடக்குமாறு கட்டளையிடுகின்ற வேளையிலுள்ள எவரேனுமாள்;
- ஊ. வா்த்தக பயன்பாட்டிற்காக வங்கியுடன் இணைந்துள்ள ஏதேனும் கம்பனியின் அலுவலகம் அல்லது கிளை; அல்லது
- எ. மாஸ்டர் கார்ட் இன்ரநஷனல் இன்கோர்பரேட்டட் அல்லது அதனுடன் இணைந்த ஏதேனும் கம்பனி அல்லது மாஸ்டர் கார்ட் இன்ரநஷனல் இன்கோப்ரேட்டட் தற்றுணிபின் படியான வேறு எவரேனும் தரப்பினர்.

## 24. தொலைந்த அட்டை தொடா்பான பொறுப்பு

24.1 அட்டையொன்று தொலைந்து அல்லது களவாடப்பட்டிருக்குமாயின் அட்டை உடமையாளா் உடனடியாக இலங்கையிலுள்ள அட்டை மையத்திற்கு அறிவித்தல் வேண்டும். அட்டை உடமையாளரும் அட்டை தொலைந்த/ களவு இடம்பெற்ற இடத்திலுள்ள உள்ளூா் பொலிஸ்/ சட்ட நடைமுறைப்படுத்தல் முகவரிடம் அறிக்கையொன்றினை தாக்கல் செய்தல் வேண்டும். வங்கியின் இலங்கையிலுள்ள அட்டை மையம் அட்டையின் இழப்புப் பற்றி கவனிக்கும் வரை அட்டை மீது உறப்படும் விதிப்புக்களுக்கு அட்டை உடமையாளரே பொறுப்பாதல் வேண்டும். அட்டை உடமையாளா் அட்டையின் பிற்புறத்தில் அச்சிடப்பட்டுள்ள உடனடித் தொடா்பு இலக்கத்திற்கு வங்கியின் வாடிக்கையாளா் சேவை மையத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி அட்டை தொலைந்தமை பற்றி அறிவித்தல் வேண்டும். அதன் பின்னா் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் வங்கியின் அட்டை மையத்திற்கு அட்டை தொலைந்து போனமையினை உறுதிப்படுத்துகின்ற நொத்தாரிசுவின் சாத்தியக்கடதாசியின் பிரதியையும் விதிப்புக்களுக்கான மறுப்பு ஏதேனுமிருப்பின் அதனையும் இழப்பு எங்கு ஏற்பட்டதோ அவ்விடயத்திலுள்ள உள்ளூா் பொலிஸ் அதிகாரிகள்/ சட்ட நடைமுறைப்படுத்தல் முகவா்களிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையின் கையொப்பமிடப்பட்ட பிரதியையும் அனுப்பிவைத்தல் வேண்டும். போதுமான சரிபாா்ப்புக்களைத் தொடா்ந்து வங்கி அட்டைக் கணக்கினை தற்காலிகமாக இடைநிறுத்துவதுடன் இவ்விடயத்தில் அட்டை உடமையாளருக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு வசதியீனத்திற்கும் பொறுப்பாகமாட்டாது. மாறாக, அட்டை உடமையாளா் வங்கியின் செல்லிடத்தொலைபேசி வங்கித்தொழில்/ இணையவழி வங்கித்தொழில் பிரயோகமூடாக அட்டைக் கணக்கினை தடுத்து வைக்கலாம். அட்டைக் கணக்கு தடுத்து

வைக்கப்பட்டிருக்கின்றது என்பதனை குறிப்பிட்ட பிரயோகத்தினூடாக விடுக்கப்படும் செய்தி, இது தொடர்பில் வங்கியின் உறுதிப்படுத்தலுக்குப் போதுமானதாகும். அதிகாரமின்றி அட்டை பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் இலங்கையிலுள்ள வங்கியின் அட்டை மையத்திற்கு காத்திரமான அறிவித்தல் வழங்கப்படும் வரை அல்லது மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் அட்டை உடமையாளரினால் அட்டை கணக்கு தடுக்கப்படும் வரை அட்டை உடமையாளர் அட்டை கட்டணக் கணக்கு பற்று வைக்கப்படும் அனைத்துத் தொகைகளுக்கும் நிலுவையிலுள்ள கொடுக்கல்வாங்கல் தொடர்பில் செய்யப்படவுள்ள பற்றுக்களுக்கும் பொறுப்பாவார். அட்டை தொலைந்தமை, களவாடப்பட்டமை அல்லது தேசமடைந்தமை பற்றி ஒரு முறை அறிவிக்கப்பட்டதும், அதன் பின்னர் அட்டை கண்டெடுக்கப்படினும்கூட, அதே அட்டையினைப் பயன்படுத்தமுடியும் என வங்கி இசைவுச் சான்றிதழ் வழங்கினாலொழிய அதனைப் பயன்படுத்தக்கூடாது. வங்கியின் இசைவுச் சான்றிதழ் இல்லாமல் அட்டை உடமையாளர் அட்டையினை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மறுக்கப்படலாம். அட்டை தொலைந்துவிட்டது, களவாடப்பட்டுவிட்டது அல்லது சேதமடைந்துவிட்டது என அறிவித்து அதனைப் பிரகடனப்படுத்திய பின்னர் அது கண்டெடுக்கப்படுமாயின் அவ்வட்டையினை வங்கியிடம் கையளிப்பதன் மூலம் அதனை செல்லுபடியற்றதாக்குவதற்கு முழுப் பொறுப்புடையவராவார். அட்டை உடமையாளர் எல்லா நேரங்களிலும் அட்டையின் பாதுகாப்பிற்கு பொறுப்புடையவராக இருப்பார் என்பதுடன் அதனை உறுதிப்படுத்தவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தலும் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் பிரச்சனைக்குரியவை என வங்கி தீர்மானிக்கப்படுமிடத்து அது அட்டையினை இரத்துச்செய்யலாம்.

24.2 அட்டை உடமையாளரின் உடமையிலிருந்த அட்டை தொலைந்து போதல், களவாடப்படுதல் அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுதல் தொடர்பான சூழ்நிலைகளில் அட்டை உடமையாளர் வங்கிக்கு அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டும் என்பதுடன், தவறிப்போன அட்டையினை கண்டறிவதற்கு உதவும் விதத்தில் வங்கி தேவையானது எனக் கருதுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தலும் வேண்டும்.

24.3 அட்டை தொலைந்து போனமையினைப் பொறுத்தவரை, வணிகர் வலையமைப்பிற்கு அறிவித்தமை தொடர்பான நிருவாக செலவுகளை ஈடுசெய்யும் விதத்தில் வங்கி கட்டணங்களை விதிக்கலாம்.

24.4 அட்டை தொலைந்துபோனமை அல்லது களவாடப்பட்டமையினைத் தொடர்ந்து அட்டை உடமையாளருக்கு பதில் அட்டையினை வழங்குவதற்கான கடப்பாடு எதனையும் வங்கி கொண்டிருக்கவில்லை. ஏதேனும் பதில் அட்டைகளை வழங்கல் கையாளல் கட்டணத்திற்கு உட்பட்டிருக்கும் என்பதுடன் இது, வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வீதத்தில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும் என்பதுடன் மூல அட்டைக்கான அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு புதிய அட்டையினை வழங்குதல் வேண்டும்.

24.5 தனிப்பட்ட அடையாள இலக்கம் அத்துடன்/அல்லது தொலைபேசி-தனிப்பட்ட அடையாள இலக்கம் தொலைந்துபோகும் களவாடப்படும் அல்லது ஏனைய தரப்பினருக்கு வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அட்டை உடமையாளர் உடனடியாக அத்தகைய தொலைந்துபோனவை அல்லது வெளிப்படுத்தப்பட்டமை தொடர்பான விபரங்களுடன் சேர்த்து பிரிவுகள் 24.1 மற்றும் 24.2 பிரிவுகளிலுள்ளவாறு வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

## 25. கொடுப்பனவு

25.1 கணக்குக் கூற்று குறைந்தபட்சக் கொடுப்பனவு நிலுவையினைக் காட்டும். இத்தொகை, கூற்றிலுள்ள மொத்த வெளிநின்ற தொகையின் அல்லது ஒரே மாதிரியான விதிப்பு வீதத்தின் (இதில் எது கூடியதோ அது) சதவீதமாக காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படுவதாக இருக்கும். குறைந்தபட்சக் கொடுப்பனவு நிலுவை என்பது உரிய கொடுப்பனவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அட்டை உடமையாளரினால் வங்கிக்குச் செலுத்தப்படவேண்டிய தொகையாகும்.

அட்டைக் கணக்கு தவணை தவறியதாக அல்லது கொடுகடன் வரையறையினை விஞ்சியதாக இருக்குமிடத்து அட்டை உடமையாளர் வங்கிக்கு உடனடியாக கொடுப்பனவுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார் என்பதுடன் இது கூற்றில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் அட்டை உடமையாளரின் வங்கிக்கான கொடுப்பனவு நிலுவையிலுள்ள குறைந்தபட்சக் கொடுப்பனவினை விடக் கூடுதலாக அல்லது சேரவேண்டிய கொடுப்பனவுத் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட்டதாக அல்லது பட்டியற்படுத்தப்படும் காலப்பகுதிக்குரியதைவிட கூடுதலானதொன்றாக இருக்கும். வங்கிக்கான அத்தகைய கொடுப்பனவுகள் கூற்றில் எடுத்துக்காட்டப்பட்டவாறான விதத்தில் இலங்கை ரூபாவில் செய்யப்படுதல் வேண்டும்.

25.2 அட்டை உடமையாளர் கூற்று கிடைக்கப்பெற்றதும் குறைந்தபட்சம் கூற்றில் விபரிக்கப்பட்ட மொத்த குறைந்தபட்ச நிலுவையிலுள்ள கொடுப்பனவுத் தொகையினை செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு துணை நிரப்பு அட்டையாளரும் அட்டை உடமையாளரினால் கூற்று பெறப்பட்டதும் நிலுவையிலுள்ள மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவினை அடிப்படை அட்டை உடமையாளருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

25.3 எதிரீடு செய்வதற்கான, மாற்றல் செய்வதற்கான வங்கியின் உரிமைகளையும் அத்துடன் சட்டத்தின் படி அல்லது வங்கிக்கு அட்டை உடமையாளருக்குமிடையும் நிலைபெறக்கூடிய வேறு ஏதேனும் உடன்படிக்கையினை காலத்திற்குக் காலம் தொடர்கின்ற விதத்தில் பணங்களின் பிரயோகத்தினை பாதிக்கின்ற விடயங்கள் எதுவும் இந்நியதிகளிலும் நிபந்தனைகளிலும் இருக்கக்கூடாது. அட்டைக் கணக்குகள், வங்கியின் பொறுப்பின் கீழ் வைத்திருக்கப்படும் வைப்புக்களின் ஆதரவுடன் திறக்கப்பட்டனவாகவும் அத்துடன் கொடுப்பனவுகள் நிலுவையில்/ செலுத்தப்படவேண்டியனவாகவும் இருக்குமிடத்து வைப்புக்களின் பெறுகைகள் அட்டைக் கணக்கிலுள்ள வெளிநிற்கும் தொகைக்கு எதிராக சீராக்கப்படும்.

25.4 அட்டை உடமையாளரின் பொறுப்புக்கள் தொடர்பில், தொடர்பான கொடுத்துத்தீர்த்தல் நிதியங்கள் வங்கியினால் பெறப்பட்டிருக்கும் அத்தகைய நேரம் வரை வங்கிக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனக் கருதப்படக்கூடாது.

25.5 இந்நியதி நிபந்தனைகளின் கீழ் வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தொகைகளும் ஏதேனும் சட்ட வரையறை, எவரேனும் வங்கி அட்டை உறுப்பினரின் இயலாமை அல்லது ஆற்றலின்மை எவ்வாறிருப்பினும் வங்கி அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது வருமதியாகவுள்ளதாக சார்த்தப்படுகின்ற அல்லது நிலுவையாகவுள்ள ஏதேனும் தொகையை எதிரீடுசெய்தல் அல்லது எதிர் கோரிக்கை என்ற வகையாக அல்லது வேறுவகையாக எத்தகையதுமான ஏதேனும் குறைப்பு இன்றி செலுத்தப்படுதல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினருக்குச் சொந்தமானதும் வங்கியின் உடைமை, கட்டுப்பாடு அல்லது தத்துவத்தில் அல்லது அவற்றின் கீழ் உள்ளனவுமான

சொத்துக்கள்/ பணங்கள்/ வைப்புக்கள்/ பிணைப்பொறுப்புக்கள் எல்லாவற்றின் மீதும் பொதுவான சோந்தையொன்றை வங்கி கொண்டிருத்தல் வேண்டும்.

25.6 அட்டை உடமையாளர் அட்டையின் கீழ் அல்லது அட்டை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய தவணை தவறிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் அறவிடும் விதத்தில் மேலே இணங்கப்பட்டவாறான சேரவேண்டிய திகதியில் செலுத்தப்பட வேண்டிய வட்டித்தொகையுடன் சேர்த்து அட்டை உடமையாளரினால் வங்கியில் பேணப்படும் ஏதேனும் நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு அத்துடன்/அல்லது அட்டை உடமையாளரினால் பேணப்படும் ஏதேனும் கணக்கிலிருந்து, வங்கியின் தற்றுணிபின்படி பற்று வைப்பதற்கு இத்தால் மாற்றமுடியாத சம்மதத்தினையும் அங்கீகாரத்தினையும் வங்கிக்கு வழங்குகிறார். வங்கிக்கு வழங்கப்பட்ட அத்தகைய தடங்கலற்ற உரிமையையும் மாற்றமுடியாத அங்கீகாரத்தினையும் வங்கி அத்தகைய உரிமைகளை அல்லது அதிகாரத்தினை அட்டை உடமையாளர் வழங்கிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ வரைந்த காசோலைகள், கேள்விகள் அல்லது எடுப்பனவுகள் அல்லது அவை போன்ற ஆவணங்கள், கௌரவிக்காமல் விடுவதற்கு அல்லது மறுக்கின்ற அளவிற்கு பயன்படுத்தமுடியும் என்பதுடன் வங்கியின் அத்தகைய நடவடிக்கையின் விளைவாக வங்கிக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய அனைத்து கோரல்கள் மற்றும் கேள்விகள் தொடர்பான இழப்பீடுகளுக்கும் அட்டை உடமையாளர் இத்தால் இணங்குகிறார். மேலும், அட்டை உடமையாளர் தவணை தவறிய தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் தொடர்பான கணக்கில் தேவையான நிதியினை வைத்திருப்பதற்கான சம்மதத்தினையும் அதிகாரத்தினையும் வங்கிக்கு வழங்குகிறார்.

25.7 பொருட்கள் அத்துடன்/அல்லது சேவைகளின் வழங்கல் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வரவு வைக்க வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வடிவத்தில் வங்கியின் அட்டை மையத்தில் கிடைக்கப்பெற்றமை பற்றிய அறிவித்தலின் பின்னர் மாத்திரமே அட்டைக் கணக்கிற்கு வங்கியால் வரவு வைக்கமுடியும்.

25.8 கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படும் காசோலையினை, காசோலையினைப் பெற்ற வங்கி ஏதேனும் காரணத்திற்காக திருப்பிவிடும் சந்தர்ப்பத்தில், சட்டத்தினால் பிரயோகிக்கப்படக்கூடிய குற்றவியல் விசாரணையொன்றிற்கு அட்டை உடமையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

25.9 அட்டை உடமையாளர் ˙ மரணமடைகின்றவிடத்து,கடன்தீராற்றலற்றவராக, அல்லது வியாபாரத்தினை முடிவுறுத்தியவராக மாறுமிடத்து அட்டை உடமையாளர், பின்னுரிமையாளர் அல்லது வாரிசுதாரர் அட்டைக் கணக்கும் வெளிநின்ற முழுமைத்தொகையினையும் முழுமையாக செலுத்துதல் வேண்டும். மீள்கொடுப்பனவு பொறுப்பு அட்டை உடமையாளரின் தொழில்தருநரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சந்தர்ப்பத்தில், அத்தகைய தொழில்தருநரின் வியாபாரம் நிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வங்குரோத்து நிலைக்குமாறுமிடத்து அல்லது ஏதேனுமொரு காரணத்தினால் வங்குரோத்து நிலையினை அடையுமிடத்து அத்துடன்/அல்லது தொழில்தருநர் அத்தகைய கொடுப்பனவினை செலுத்த இயலாதவராக இருக்குமிடத்து அட்டை உடமையாளர் வங்கியை முழுமையாக திருப்பதிப்படுத்தும் விதத்தில் அனைத்து நிலுவைகளையும் தீர்ப்பனவு செய்வதற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவராகிறார்.

25.10 கூற்று பெறப்படவில்லையென அட்டை உடமையாளரினால் தெரிவிக்கப்படுவது கட்டணங்களை நேரகாலத்துடன் செலுத்தாமைக்கான போதுமான காரணமாக ஏற்கமுடியாது. எந்தவொரு காரணத்திற்காகவும் கூற்று பெறப்படாமல் போகும் சந்தர்ப்பமும் அடிப்படை அட்டை

உடமையாளர் பிரிவு 30.3இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு வங்கியைத் தொடர்புகொள்வதற்கு நடவடிக்கையினை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவரின்/அவளின் பிந்திய நிலுவையினைக் கோருவதற்கும் அத்துடன்/அல்லது கூற்றின் பிரதியை பெறுவதற்கும் ஏற்புடைத்தான அனைத்துக் கட்டணங்களையும் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

25.11 வங்கிக் கொடுப்பனவுகளைப் பெற்று அதனை அட்டைக் கணக்கில் வரவு வைக்கும் வேளையில் மாத்திரமே கொடுப்பனவுகள் இடம்பெறுகின்றதுடன் அட்டை உடமையாளர் அதனை அனுப்பிவைத்ததும் இடம்பெறுவதில்லை. ஏதேனும் காசு வைப்புக்களைப் பொறுத்தவரையில் அவை வங்கியினால் பெறப்பட்டு அது அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் மேல் மட்டுமே கருத்திற்கொளாளப்படும். காசோலையொன்று வைப்புச் செய்யப்பட்டதும் காசோலை தீர்ப்பனவு செய்யப்பட்டு பெறுகைகள் வங்கியினால் பெறப்பட்டு அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும் வரை கொடுப்பனவு செய்யப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

25.12 கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியில், அட்டை உடமையாளரின் அட்டைப் பட்டியல் தொகையின் சதவீதமொன்றினை செலுத்துவதற்கு வங்கியுடனான நடைமுறை அல்லது சேமிப்பு கணக்கிற்கு அட்டை உடமையாளர் நேரடியாக பற்று நிலையியல் அறிவுறுத்தலொன்றினை வழங்கலாம்.

25.13 அத்தகைய நிலையில் அறிவுறுத்தல்களுக்கு செய்யப்படும் திருத்தங்கள் அல்லது அதனை இரத்துச்செய்தல் பற்றி அடுத்த கொடுப்பனவு செலுத்தவேண்டிய திகதிக்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக வங்கிக்கு அறிவிப்பதற்கு அட்டை உடமையாளர் இணங்குகிறார்.

25.14 வங்கியுடனான கணக்கினைத் தீர்ப்பதற்காக வழங்கப்படுகின்ற நேரடி பற்று நிலையியல் அறிவுறுத்தல்களுக்காக பின்வரும் மேலதிக நியதிகளும் நிபந்தனைகளும் விதிக்கப்படும் (அ) வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட காசோலை அல்லது வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் ஏற்பாடுகளுக்கெதிராக ஏதேனும் அத்தகைய நிலையியல் அறிவுறுத்தல்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கான தீர்மானத்தினை எடுப்பதற்கான உரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. (ஆ) கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய திகதிக்கு ஒருநாள் முன்னதாக நிலையியல் அறிவுறுத்தலைப் பூர்த்திசெய்யும் விதத்தில் குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினை பேணுவதற்கு அட்டை உடமையாளர் இணங்குகிறார்.

தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான மீதி இல்லாத சந்தர்ப்பத்தில் வங்கி அதன் தற்றுணிபின்படி, நிலையியல் அறிவுறுத்தல்களுக்கிணங்க கொடுப்பனவுத் தொகையினை ஈடுசெய்யும் விதத்தில் காலத்திற்றுக் காலம் வங்கி அதன் தற்றுணிபிற்கேற்ப மேலதிகப் பற்று வசதிகளை வழங்கலாம். அட்டை உடமையாளர் கேட்கப்படும் நேரத்தில் அனைத்து வெளிநிற்கும் தொகைகளையும் காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வீதத்தில் அதன் மீது ஒன்று சேரும் நிதிக் கட்டணங்களையும் சேர்த்து மீளச்செலுத்துவதற்கு பிணிக்கப்படுகின்றார்.

25.15 அட்டை உடமையாளருக்கு அட்டை வழங்கப்பட்ட நேரத்தில் வங்கியினால் கோரப்படாத காசோலை அல்லது காசுப் பிணையங்கள் போன்றவற்றை வங்கி எந்தவொரு நேரத்திலும் திகதியிடப்படாத காசோலையொன்றினையும் அத்துடன்/அல்லது வாக்குறுதி வழங்கப்பட்ட வங்கியின் பெயரில் எழுதப்பட்ட ஒரு தொகைக்கான காசுப் பிணைகளையும் வங்கி எந்தவொரு நேரத்திலும் கோரமுடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அட்டை உடமையாளர்

குறிப்பிட்ட காசோலையின் மீது திகதியை இடுவதற்கு வங்கிக்கு அங்கீகாரமளிப்பதாக எனக் கருதவேண்டும் என்பதுடன் வங்கிக்கு சேரவேண்டிய ஏதேனும் தொகைக்கெதிராக இடப்பட்ட திகதியன்று கொடுப்பனவிற்காக சமர்ப்பித்தலும் வேண்டும்.

25.16 செலுத்தப்படவேண்டிய உரிய தகிதியில் அட்டை உடமையாளர் ஏதேனும் பணத்தினை செலுத்தத்தவறுமிடத்து அல்லது அவை நிலுவையாக மாறுவதற்கு முன்னதாக அவை செலுத்தப்பட வேண்டும் என பிரகடனப்படுத்தப்படும் போது அல்லது அட்டை உடமையாளரின் நிதியியல்/ கொடுகடன்/ ஏனைய வசதிகளை அனுபவிக்கும் ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் ஏதேனும் தவணை தவறிய கடப்பாடுகள் காணப்படுமிடத்து, அத்தகை சந்தர்ப்பத்தில் வங்கி ஒவ்வொரு உடன்படிக்கையின் கீழும் அல்லது இவ்வுடன்படிக்கையின் கீழ், அதன் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட உரிமைகளுக்கும் பங்கமில்லாமல் இவ்வுடன்படிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட அதன் எல்லா உரிமைகளையும் அல்லது ஏதேனும் உரிமையினை வங்கியின் தற்றுணிபிற்கேற்ப நிறைவேற்றலாம் என்பதனை அட்டை உடமையாளர் வெளிப்படையாக ஏற்றுக்கொள்கிறார்.

25.17 வங்கி, எவரேனும் அட்டை உடமையாளரிடமிருந்து வரவேண்டிய நிலுவைகளைச் சேரிப்பதனை அதன் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பு முகவர்களுக்கு வழங்குவதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் வங்கி, அவ்வாறு செய்யும்போது அதற்கு உறப்பட்ட செலவுகளை அட்டைக் கணக்கில் விதிப்பதற்கு உரித்துடையதாகும்.

25.18 ஏதேனும் கொடுப்பனவுச் சாதனம் அட்டை உடமையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பபடும் போது அது மறுக்கப்படுகையில் வங்கி அட்டை உடமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் அதன் தற்றுணிபின்படி தண்டக் கட்டணமொன்றை விதிக்கலாம் அத்துடன்/அல்லது அட்டைக் கணக்கினை இரத்துச்செய்யலாம்.

25.19 இவ்வுடன்படிக்கையின் மற்றைய ஏற்பாடுகளுக்கும் பங்கமில்லாமல் அடிப்படை அட்டை உடமையாளர் அத்துடன்/அல்லது துணை நிரப்பு அட்டை உடமையாளர் ஒரு மாதத்திற்கும் கூடுதலாக இலங்கையில் இல்லாதுபோனால் அடிப்படை அட்டை உடமையாளர் அட்டைக் கணக்கினைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தெளிவானதும் குறித்துரைக்கப்பட்டதுமான அறிவுத்தல்களை வழங்க வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவுறுத்தல்களை, அடிப்படை அட்டை உடமையாளரும் அத்துடன்/அல்லது துணை நிரப்பு அட்டை உடமையாளரும் புறப்படுதவற்கு முன்னதாக வங்கியின் அட்டை மையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

## 26. மீறுதல்

எவரேனும் அட்டை உடமையாளர் இவ்வுடன்படிக்கையினை ஏதேனும் விதத்தில் மீறுகின்ற சந்தர்ப்பத்தில், (அ) இவ்வுடன்படிக்கையின் மற்றேதேனும் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும் வங்கிக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அத்தகைய மீறல் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பிற்கு, இழப்பீட்டினை செலுத்துதல் வேண்டும். (ஆ) அட்டை உடமையாளர், கோரிக்கையின் பேரில் அட்டை உடமையாளரிடமிருந்து வங்கிக்குச் சேரவேண்டிய அனைத்து வெளிநிற்கும் தொகைகளையும் அத்தகைய கோரிக்கை திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்துவதற்குப் பொறுப்புடையவராவார்.

## 27. முடிவுறுத்தல்

27.1 அடிப்படை அட்டை உடமைாளர் எந்தவொரு நேரத்திலும் (துணை நிரப்பு அட்டை (அட்டைகள்) உட்பட) முடிவுறுத்துவதற்கான கோரிக்கையினை எழுத்து மூலமோ அழைப்பின்

மூலமோ கீழேயுள்ள பிரிவு 30.3இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் வங்கிக்கு தெரிவிக்கலாம். எது எப்படியிருப்பினும் அடிப்படை அட்டை உடமையாளர் அட்டைக் கணக்கின் மொத்த வெளிநின்ற தொகையினை (ஏதேனும் துணை நிரப்பு அட்டை உட்பட) அட்டைக் கணக்கினை முடிவுறுத்துவதற்கான கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். அட்டைக் கணக்கில் ஏதேனும் (ஏதேனும் துணை நிரப்பு அட்டைகள் உட்பட) வரவு மீதி இருக்குமாயின் அடிப்படை அட்டை உடமையாளர் அதனை மீளளிக்குமாறு சரியான முறையில் எழுத்து மூலமான அறிவித்தலொன்றினை வங்கிக்கு வழங்குதல் வேண்டும். தவறுமிடத்து ஏதேனும் வரவு மீதி இருப்பின் அது வங்கியினால் ஈர்த்துக் கொள்ளப்படும்.

27.2 அடிப்படை அட்டை உடமையாளர் அட்டைக் கணக்கினை முடிவுறுத்துமாறு வங்கியைக் கேட்டுக்கொண்டமையினைத் தொடர்ந்து அட்டை உடமையாளர் அவர்களது தொடர்பான அட்டையினை மின்காந்தக் கோடு வெட்டப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நான்கு துண்டுகளாக வெட்டப்படுவதன் மூலம் அட்டை உடமையாளரினால் (உடமையாளர்களினால்) பாதுகாப்பான முறையில் அழிக்கப்படுகிறது.

27.3 மேலே குறிப்பிடப்பட்டவாறு, செய்யவில்லையாயின் அடிப்படை அட்டை உடமையாளர் ஏதேனும் அட்டையினையோ அட்டைக் கணக்கினையோ முடிவுறுத்தியவராகார்.

27.4 அட்டை அழிக்கப்பட்டுவிட்டதாக அட்டை உடமையாளர் தெரிவித்ததன் பின்னர் அட்டை மீது ஏதேனும் கட்டணங்கள் உறப்படும் சந்தர்ப்பத்தில் அட்டை உடமையாளர் ஒன்றில் தவறாக பயன்படுத்தியதன் விளைவாக மற்றும் ஒன்றில் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும்சரி இல்லையெனினும்சரி அத்தகைய கட்டணங்களுக்கு அட்டை உடமையாளரே பொறுப்பாதல் வேண்டும்.

27.5 அறிவித்தலுடன் எந்தவொரு நேரத்திலும் வங்கி, தேவைப்படும் வங்கியினது தற்றுணிபில் சூழ்நிலைகளுக்குகேற்ப அட்டையை முடிவுறுத்தும். அட்டை முடிவுறுத்தப்பட்டதும் வங்கிக்கும் அட்டை உடமையாளருக்குமிடையிலான ஏதேனும் முன்னைய உடன்படிக்கைகள் எதுஎப்படியிருப்பினும் மாறாக (i) அட்டையைப் பயன்படுத்துவதற்கான அட்டை உடமையாளரின் உரிமை உடனடியாக நிறுத்தப்படும்; (ii) ஒன்றில் கூற்றில் ஏற்கனவே பிரதிபலிக்கப்படினும்சரி இல்லையெனினும்சரி அப்பொழுது வெளிநிற்கின்ற அனைத்து கட்டணங்களும், அதேபோன்று முடிவுறுத்தலின் பின்னர் உறப்பட்ட ஏதேனும் கட்டணத்தொகையும் (தொடர்பான கொடுக்கல்வாங்கல் அறிவுறுத்தல் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்) உடனடியாக நிலுவையாக மாறும் என்பதுடன் அவை பிரதிபலிக்கப்பட்டவாறு ஏற்புடைத்தான ஒன்றுசேர்ந்த வட்டியுடன் சேர்த்து அட்டையாளர் கொடுப்பனவு செய்தல் வேண்டும். அத்துடன் (iii) அட்டைக் கணக்கின் முடிவுறுத்தல் நடைமுறைக்கு வந்ததும் ஏதேனும் ஒன்று சேர்ந்த வெகுமதிப் புள்ளிகள் தன்னியக்கமாக இரத்துச்செய்யப்பட்டுவிடும்.

27.6 அட்டைக் கணக்கின் முழுமொத்த வெளிநின்ற நிலுவையை, அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு அட்டைக் கணக்கில் இன்னமும் விதிக்கப்படாத வெளிநிற்கின்ற ஏதேனும் தொகையுடன் சேர்ந்து உடனடியாக நிலுவையாக மாறும் தொகையினை உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது அல்லது அட்டை உடமையாளர் வங்குரோத்து அல்லது மரணமடைகையில் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். அட்டை உடமையாளர் அல்லது அவரது வாரிசு அட்டைக் கணக்கிலுள்ள ஏதேனும் வெளிநின்ற தொகையினை தீர்ப்பனவு செய்ய பொறுப்புடையவராக இருக்கவேண்டும் என்பதுடன் (சட்டக் கட்டணங்கள் உட்பட) அத்தகைய வெளிநின்ற தொகையினை அறவிட்டமையினால் உறப்பட்ட செலவுகள்

உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் வங்கிக்கு இழப்பீடாக செலுத்துதல் வேண்டும். நிலுவையிலுள்ள அத்தகைய மீளக்கொடுப்பனவுகளைப் பொறுத்தவரையில் வங்கி நிதிக் கட்டணங்களையும் ஏனைய கட்டணங்களையும் அப்போது நிலவுகின்ற வீதத்தில் (வீதங்களில்) தொடர்ந்து விதிப்பதற்கு உரித்துடையதாகும்.

27.7 ஏதேனும் தரப்பினரால் இவ்வுடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருப்பினும் கூட, அட்டையினை பயன்படுத்தியதன் மூலம் உறப்பட்ட அனைத்து மேலதிகச் செலவுகளுக்கும் அட்டை உடமையாளரே தொடர்ந்தும் பொறுப்பாக இருப்பார்.

27.8 மேலேயுள்ள பிரிவு 27.1இன் நியதிகளில் அட்டைக் கண்ககினை முடிவுறுத்துவதற்கு அட்டை உடமையாளர் விரும்புகின்றவிடத்து, அட்டை உடமையாளர் அத்தகைய முடிவுறுத்தல் கோரிக்கைக்கு முன்னதாக ஏதேனும் ஒன்றுசேர்ந்த வெகுமதி புள்ளிகளை மீட்டுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறுமிடத்து அட்டைக் கணக்கின் முடிவுறுத்தல் நடைமுறைக்கு வந்ததும் தன்னியக்கமாகவே அது இரத்தாகிவிடும்.

## 28. திருத்தங்கள்

28.1 வங்கி, உடன்படிக்கையின் ஏதேனும் நியதிகளை காலத்திற்குக் காலம் திருத்துவதற்கான (கூட்டுவதற்கு, மாற்றுவதற்கு, திருத்தியமைப்பதற்கு, பதிலீடு செய்வதற்கு அல்லது நீங்கிவிடுவது உட்பட) உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தகைய திருத்தம் (திருத்தங்கள்) தொடர்பான அறிவித்தல் கீழேயுள்ள 30ஆம் பிரிவின் நியதிகளில் அட்டை உடமையாளர்களுக்கு வழங்கப்படலாம்.

28.2 அத்தகைய திருத்தங்கள் நடைமுறைக்கு வந்த பின்னரும் அட்டை உடமையாளர் தொடர்ந்தும் அட்டையைப் பேணுவாராயின் அல்லது பயன்படுத்துவாராயின், அட்டை உடமையாளர் உடன்படிக்கைக்கு செய்யப்பட்ட மாற்றல்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் எனக் கருதுவதற்கு வங்கி உரித்துடையதாகும். அத்தகைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லையாயின், அடிப்படை அட்டை உடமையாளர் மேலே 27ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க இவ்வுடன்படிக்கையினை முடிவுறுத்திக் கொள்ளுதல் வேண்டும் (முடிவுறுத்தல்). அட்டை உடமையாளர் அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கட்டணங்களையும் விதிப்புக்களையும் செலுத்துவதற்கு தொடர்ந்தும் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.

## 29. எச்சரிக்கை செய்தித்திரட்டுக்கள்

வங்கி, காரணம் எதனையும் தெரிவிக்காமலேயே இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள எச்சரிக்கை செய்தித்திரட்டில் அட்டை தொடர்பான குறிப்புக்களைச் செய்வதற்கும் அல்லது அட்டையை பறிமுதல் செய்வதற்காக சேவை நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்குமான உரிமையினையும் தற்றுணிபினையும் கொண்டுள்ளது.

## 30. அறிவித்தல்கள்

30.1 இவ்வுடன்படிக்கையின் கீழ் எந்தவொரு அறிவித்தலும் (அதற்கு செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் உட்பட) மற்றும் அட்டைக் கணக்குடன் தொடர்பான வேறுஏதேனும் அறிவித்தலும் எழுத்தில் பத்திரிகை அத்துடன்/அல்லதுஇலத்திரனியல் தொடர்பூட்டல் மார்க்கங்கள்/ வங்கியின் கூட்டாண்மை வெப்பதளம் (www.nationstrust.com) அத்துடன்/அல்லது தொடர்பூட்டல்கள் தன்மையின் அடிப்படையில் வங்கி பொருத்தமானது எனக் கருதுகின்ற வேறுஏதேனும் முறையில் வழங்குதல் வேண்டும். அட்டைக் கணக்குக் கூற்று, கூற்றின் ஒரு பகுதியாக செய்யப்பட்டவை தொடர்பான ஏதேனும் தகவல்கள் அல்லது கருத்துக்கள் இவ்வுடன்படிக்கையின் கீழ் அறிவித்தலொன்றாகவே கருதப்படுதல் வேண்டும்.

30.2 மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் வழங்கப்பட்ட அறிவித்தல்கள் பின்வரும் விதத்தில் நடைமுறைக்குவருதலாதல் வேண்டும்.

- அஞ்சலில் அனுப்பப்பட்டிருப்பின் அஞ்சல் செய்யப்பட்டதன் பின்னர் ஐந்து (5) நாட்கள்
- மின்னஞ்சல், குறுஞ்செய்திச் சேவை (SMS) அத்துடன்/அல்லது ஏனைய இலத்திரனியல் வடிவம் அலைவரிசைக் கடத்திகள் மூலம் அனுப்பப்பட்டிருப்பின் (வங்கி, செய்தி விநியோகம் பழுதடைந்திருக்கின்றது என்ற அறிவித்தலைப் பெற்றிருந்தாலொழிய, அவ்விடயத்தில் இது வேறுபட்ட விதத்தில் தொடர்பூட்டப்படும்); அத்துடன்
- தினசரி செய்தித்தாளில் பொதுமக்களுக்கான அறிவித்தலாக வெளியிப்பட்டிருப்பின், வங்கிக் கிளைகளில் ஒட்டப்பட்டிருப்பின் தன்னியக்கக்கூற்றுப் பொறிகளில் அல்லது வங்கியின் கூட்டாண்மை வெப்தளத்தில் (www.nationstrust.com) அல்லது வேறேதேனும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பின், பிரசுரிக்கப்பட்ட அல்லது ஒட்டப்பட்ட நேரத்தில் அல்லது வங்கி தொடர்பூட்டலின் போது தெரிவித்த நேரத்தில் மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்ட விதத்தில் அனுப்பப்பட்ட அறிவித்தல்கள் போதுமானதும் பொருத்தமானதுமான அறிவித்தலாக கருதப்படல் வேண்டும் என்பதுடன் அது அட்டை உடமையாளர்களை பிணித்தலும் வேண்டும்.

30.3 அட்டை உடமையாளரின் பெயர், தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் (அதாவது அஞ்சல் முகவரி, செல்லிடத்தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள வேறுஏதேனும் விபரங்கள்) அத்துடன்/அல்லது கணக்கு இலக்கத்தினை இரத்துச்செய்தவதற்கான ஏதேனும் கோரிக்கை உள்ளிட்ட வங்கிக்கான ஏதேனும் எழுத்திலான அறிவித்தலை அடிப்படை அட்டை உடமையாளர் அஞ்சல், மின்னஞ்சல், வங்கியின் டிஜிட்டல் மார்க்கங்களைப் பயன்படுத்தி அல்லது வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள அடிப்படை அட்டை உடமையாளரின் செல்லிடத்தொலைபேசியூடாக அட்டையின் பின்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் சேவை உடனடி தொடர்பு இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் எவ்வித தாமதமுமின்றி வங்கிக்கு தொடர்பூட்டுதல் வேண்டும். மின்னஞ்சல் அல்லது செல்லிடத்தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளும் போது வங்கி அடிப்படை அட்டை உடமையாளரின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி அல்லது பதிவுசெய்யப்பட்ட செல்லிடத்தொலைபேசி இலக்கம் (ஏற்புடைத்தானவாறு) என்பனவற்றினூடாக தொடர்பூட்டப்படும் அறிவித்தலை மட்டுமே ஏற்றுக்கொள்ளும். வங்கிக்கு அனுப்பப்படும் எந்தவொரு அறிவித்தல் தொடர்பிலும் வங்கியின் அப்போது நிலவும் சேவையின் நியமத்திற்கிணங்கவே நடவடிக்கை எடுக்கப்படும்.

அட்டை உடமையாளர் இற்றைப்படுத்தப்பட்ட தொடர்பூட்டல் தகவல்களை வங்கிக்கு வழங்கவில்லையாயின், அறிவித்தலை பெறாமையின் காரணமாக ஏற்படும் ஏதேனும் இழப்புக்களை அட்டை உடமையாளர் தாங்கிக்கொள்ளுதல் வேண்டும். இறுதியாக வங்கிக்கு அறிவிக்கப்பட்ட முகவரியில்/ தொடர்பூட்டல் தகவலில் அட்டை உடமையாளரை அடையமுடியாது என வங்கி நியாயமான முறையில் நம்புமாயின் அறிவித்தல் அனுப்புவதனை இடைநிறுத்திக்கொள்ளும் அல்லது நிறுத்திக்கொள்ளும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அட்டை உடமையாளர் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அறிவித்தலுக்கான அனைத்து தேவைப்பாடுகளையும் வலியுறுத்தாது விட்டுவிடுகிறார்.

30.4 வேறுவிதமாக வங்கியினால் தெரிவிக்கப்பட்டிருந்தாலொழிய வங்கிக்கான அறிவித்தலை அடிப்படை அட்டை உடமையாளர் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**அஞ்சல் மூலம்:** நேஷன் ட்ரஸ்ட் வங்கி
அட்டை மையம்
256, சிறிமத் இராமநாதன் மாவத்தை
கொழும்பு - 15

**மின்னஞ்சல் மூலம்:** creditcards@nationastrust.com

## 31. நடைமுறைப்படுத்தல் செலவுகள்

அடிப்படை அட்டை உடமையாளரும் துணை நிரப்பு அட்டை உடமையாளரும் அனைத்து சட்டம் தொடர்பிலான கட்டணங்கள் முழுமையான இழப்பீட்டு அடிப்படையிலான பகிர்ந்தளிப்புக்கள் உட்பட, இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்துவதில் அல்லது நடைமுறைப்படுத்த எத்தனிப்பதில் வங்கியினால் உறப்படும் ஏதேனும் அல்லது அனைத்து செலவுகள் தொடர்பிலும் வங்கிக்கு இழப்பீடுகளை கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்துவதற்கு பொறுப்புடையவர்களாவர்.

## 32. துணைநிரப்பு அட்டைகள்

காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது அட்டை உடமையாளரின் குடும்ப உறுப்பினர்களுக்கு துணை நிரப்பு அட்டை வசதிகளை வங்கியின் ஏக தற்றுணிபிற்கேற்ப வழங்கலாம். அட்டைக் கணக்கு மீதான ஏதேனும் துணை நிரப்பு அட்டை (அட்டைகளின்) உடமையாளர்களும் (உடமையாளர்கள்) மற்றும் அடிப்படை அட்டை உடமையாளர்களும் அட்டைகளை வழங்குவதற்கு அங்கீகாரமளிப்பதுடன் அட்டையினை (அட்டைகளை) பயன்படுத்துவதனால் உறப்படுகின்ற அனைத்து கட்டணங்களுக்கும் கூட்டாகவும் தனியாகவும் பொறுப்புடையவராவர். துணைநிரப்பு அட்டையின் வசதி அடிப்படை அட்டை உடமையாளர் தொடர்வதன் மீது தங்கியிருக்கும்.

## 33. கொடுப்பனவுகளைப் பயன்படுத்துதல்

வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து அல்லது அவர் சார்பில் வங்கியினால் பெறப்பட்ட எவையேனும் மற்றும் எல்லாக் கொடுப்பனவுகளும், வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது கொடுப்பனவைச் செய்கின்ற வேறு எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட ஒதுக்கீட்டு அறிவுறுத்தல் எவ்வாறிருப்பினும், வங்கி தகுதியானது என கருதுகின்றவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஒழுங்கிலும் வங்கியினால் பயன்படுத்தப்படலாம் அல்லது ஒதுக்கீடுசெய்யப்படலாம்.

## 34. தொலைபேசி, இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அங்கீகாரமளித்தல் மற்றும் இழப்பீடு:

34.1 அட்டை உடமையாளர், நேரத்திற்கு நேரம் மாறக்கூடிய அல்லது நோக்கத்திற்கு ஏற்பமாறக்கூடிய அட்டை உடமையாளரினால் அல்லது அவரின்/அவளின் சார்பில் தொலைபேசி, இணையத்தளம் அல்லது மின்னஞ்சல் மூலம் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்தல், கோரிக்கை அல்லது ஏதேனும் சூழ்நிலைகளின் மீதும் அவற்றிற்கு ஏற்பவும் வங்கியின் பக்கத்தில் விசாரணைகள் ஏதுமில்லாமலே இருப்பது உட்பட, மேற்குறிப்பிட்ட பொதுவான தன்மைகளுக்கு பங்கமில்லாமல் அறிவுறுததல்களை வழங்குகின்ற அல்லது அறிவுறுத்தல்களை வழங்குகின்ற ஆளின் அதிகாரம் அல்லது அடையாளத்தின்படி இவ்வறிவித்தலை கிடைக்கப்பெற்ற நேரத்தில் நிலவிய சூழ்நிலைகளை கருத்திற்கொள்ளாமல் வங்கிக்கு அங்கீகாரமளிக்கின்றார். அட்டை உடமையாளர் அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்ற நேரம்/ திகதி தொடர்பில் வங்கியின் முடிவை இறுதி முடிவாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

34.2 வங்கியானது அட்டை உடமையாளரினால் முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டவாறும் அல்லது அவர் மீது பிணிப்பதாகவும் அறிவுறுத்தல்களை கருதுவதற்கு உரித்துடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் ஈடுபடும் கொடுக்கல்வாங்கலின் தன்மையை அல்லது ஏற்பாட்டை அல்லது பணத்தொகையினைப் பொருட்படுத்தாதும் அறிவுறுத்தல்களின் நியதிகளிலுள்ள ஏதேனும் பிழை, பொருள்மயக்கம், தவறான புரிந்துகொள்ளல் அல்லது தெளிவு போதாமை எது எவ்வாறிருப்பினும், அறிவித்தலானது, பணத்தை கொடுப்பனவு செய்வதற்காயினும்சரி, அல்லது வேறு வகையில் ஏதேனம் கணக்கில் பற்றுவைப்பதற்கு அல்லது வரவுவைப்பதற்காயினும் சரி, அல்லது ஏதேனும் பணத்தின் அல்லது ஆவணங்களின் கையுதிர்புடன் தொடர்புடையதாயினும் சரி, அல்லது வங்கியுடன் அல்லது வேறு எவரேனும் ஆளுடனான ஏதேனும் உடன்படிக்கைக்கு அல்லது வேறு ஏற்பாட்டிற்கு அட்டை உடமையாளரைப் பிணிப்பதற்கு கருதுவதாயினும் சரி, அல்லது எதுவாயினும் ஏதேனும் வேறு வகையான கொடுக்கல்வாங்கலுக்கு அல்லது ஏற்பாடடுக்கு அட்டை உடமையாளரை கடப்பாடாக்குவதாயினும் சரி, வங்கி பொருத்தமானதெனக் கருதுகின்றவாறு அறிவுறுத்தல்கள் தொடர்பில் அல்லது அறிவுறுத்தல்கள் மீது சார்ந்திருந்து அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வங்கி உரித்துடையதாகவிருத்தல் வேண்டும்.

34.3 இவ்வங்கீகாரம் மற்றும் இழப்பீட்டு நியமங்களுக்கிணங்க செயற்படுகின்ற வங்கியைப் பரிசீலனையில் கொண்டு அட்டை உடமையாளர் மாற்றமுடியாத விதத்தில் வங்கிக்கு இழப்பீடு செலுத்த பொறுப்பேற்பதுடன், ஏதேனும் விதத்திலும் எப்படியிருப்பினும் தோன்றுகின்ற அல்லது அறிவுறுத்தல்களுடன் தொடர்புபட்ட விதத்தில் வங்கியினால் உறப்பட்ட அல்லது ஏற்பட்ட அனைத்து இழப்புக்கள், கோரல்கள், நடவடிக்கைகள், வழக்குத்தொடுப்புக்கள், கோரிக்கைகள், சேதங்கள், செலவுகள் மற்றும் செலவினங்களுக்கெதிராக இழப்பீடுகளை வங்கிக்குச் செலுத்தலும் வேண்டும்.

34.4 அட்டை உடமையாளரிடமிருந்து முடிவுறுத்தலுக்கான அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும், அத்தகைய போதும் காலாவதியாவதற்கு முன்னர் அங்கீகாரம் மற்றும் இழப்பீட்டு நியதிகளுக்கிணங்க, ஆற்றப்பட்ட எந்தவொரு செயற்பாடு தொடர்பிலும் இவ்வங்கீகாரம் மற்றும் இழப்பீட்டு நியதிகளின் கீழான ஏதேனும் பொறுப்புக்களிடமிருந்து வாடிக்கையாளர் விடுவிக்கப்பட்டு அத்தகைய முடிறுத்தல் பாதுகாக்கப்படும் வரை இவ்வங்கீகாரம் மற்றும் இழப்பீட்டு நியதிகள் முழு வலுவுடன் நடைமுறையிலிருக்கும்.

**35. நானாவிதமானவை**

35.1 அட்டை உடமையாளர் பற்றிய தேவையான ஏதேனும் மேலதிக தகவல்களை பெறுவதற்காக அட்டை உடமையாளர் அவரது தொழில்தருநர் அல்லது வேறேதேனும் மூலங்களை தொடர்பு கொள்வதற்கான அதிகாரத்தினை இத்தால் வங்கிக்கு வழங்குகிறார். அட்டை உடமையாளர் பட்டியல் மீது சேரவேண்டிய கொடுப்பனவு பற்றி தொலைபேசியூடாக நினைவூட்டவும் அல்லது அட்டை உடமையாளரின் சார்பில் தொலைபேசியை பெறுகின்ற ஆளிடம் நினைவூட்டல் செய்தியை வழங்கவும். வங்கி உரித்துடையது என்பதனை அட்டை உடமையாளர் ஏற்றுக்கொள்கிறார். அட்டையின் மீது செலுத்தப்படவேண்டிய நிலுவை தொடர்பில் அட்டை உடமையாளருக்கு எழுத்தில் அல்லது வேறேதேனும் விதத்தில் எவ்விதத்திலேனும் நினைவூட்டுவது தொடர்பில் வங்கி கடப்பாடுகளெதனையும் கொண்டிராது என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டவை தொடர்பில் வங்கி புரிகின்ற தெரிவுகளும் உரிமைகளும் கேள்விக்குட்படுத்தமுடியாதவையுமாகும்.

35.2 அட்டை உடமையாளர், அவரது அட்டை மீது வெளிநிற்கின்ற நிலுவை தொடர்பில் அதற்கெதிரக அவருக்குள்ள சொத்து/ பணத்தினை அறவிடவும் அதனுடன் தொடர்பான விடயங்களில் பொருத்தமானது என வங்கி கருதும் அனைத்து நடவடிக்கைகளையும்

மேற்கொள்ளவும் உறுதிகள் மற்றும் பொருட்களைப் பெறவும் இவற்றின்பொருட்டு அட்டை உடமையாளர், அவரது கம்பனியினை வங்கியாளர் அணுகுவதற்கும் இத்தால் வங்கிக்கு அவரின் மாற்றமுடியாத சம்மதத்தினையும் அதிகாரத்தினையும் வழங்குகிறார்.

35.3 வங்கியின் செயற்பாடு அல்லது அதன் நடத்தையின் மூலம் வங்கியின் உரிமைகள் எதுவும் விட்டுக்கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றோ அல்லது அத்தகைய உரிமைகளை செயற்படுத்துவதில் ஏதேனும் கவனயீனமோ, தாமதமோ காணப்படுகின்றது என்றோ கருதப்படக்கூடாது என்பதுடன் வங்கியினால் எழுத்தில் அவை விசேடமாக தள்ளுபடி செய்யப்படும் வரை ஒவ்வொரு உரிமையும் தொடர்வதுடன் நடைமுறையிலும் இருக்கும்.

35.4 அட்டை உடமையாளருக்கான வங்கியின் எழுத்து மூலமான அறிவித்தலுடன் அட்டை உடமையாளரின் அனைத்து வெளிநின்ற நிலுவைகள் தொடர்பில் வங்கியின் தெரிவிற்கேற்ப எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்ய, மாற்றல் செய்ய அல்லது ஒப்படைக்க வங்கி உரித்தினையும முழுமையான அதிகாரத்தினையும் வலுவினையும் கொண்டிருக்கின்றது என்பதனை அட்டை உடமையாளர் வெளிப்படையாக அங்கீகரித்திருப்பதுடன் ஏற்றுக்கொண்டுமிருக்கின்றார் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நடவடிக்கைகள் அட்டை உடமையாளரை பிணித்தலும் வேண்டும். அட்டைக் கணக்கின் சார்பில் ஏதேனும் செலவுகளை விதிப்பதற்கு அட்டை உடமையாளர் சம்மதத்தினையும் அங்கீகாரத்தினையும் வங்கிக்கு வழங்குகிறார்.

35.5 அட்டைக் கணக்கில் ஏதேனும் வரவு மீதி இருக்குமாயின் அது தொடர்பில் வங்கியின் சார்பில் வட்டியை வழங்குவதற்கான எவ்வித கடப்பாடுகளையும் எவ்விதத்திலேனும் வங்கி கொண்டிருக்காது என்ற உண்மையினை அட்டை உடமையாளர் அறிந்திருத்தல் வேண்டும்.

35.6 அட்டை உடமையாளருக்கு அவரின்/அவளின் அட்டைக்கு ஏதேனும் விசுவாச நிகழ்ச்சித்திட்டம் கிடைக்கக்கூடியதாயிருப்பின் அது அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடைத்தான தனியான நியதிகள் மற்றும் நிபந்தகைகளின் மூலம் ஆளுகை செய்யப்படும். எதுஎப்படி இருப்பினும் அட்டைக் கணக்கு தொடர்பான ஏதேனும் கொடுப்பனவுகள் தொண்ணூறு நாட்களுக்கு (90) மேல் நிலுவையில் இருக்குமாயின் அல்லது கொடுப்பனவு செய்யாமையின் காரணமாக அட்டைக் கணக்கு குற்றமுடையதாக காணப்படுமிடத்து அட்டைக் கணக்கிலுள்ள ஏதேனும் ஒன்றுசேர்ந்த வெகுமதிப் புள்ளிக்ள் தன்னியக்கமாகவே இரத்தாகிவிடும்.

35.7 சேவை நிறுவனங்கள் அவர்களது வணிகம் அல்லது சேவை தொடர்பாக கழிவு அல்லது குறைப்பு விற்பனைகளை ஒழுங்குசெய்து நடத்தும் போது அத்தகைய சேவை நிறுவனங்கள் அட்டையினை மறுக்கக்கூடும். வங்கி எந்தவொரு நேரத்திலும் இவ்வுடன்படிக்கையினை மாற்றுவதற்கான உரிமையினைக் கொண்டிருப்பதுடன் அவ்வாறான ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அடிப்படை அட்டை உடமையாளருக்கு அறிவிக்கும். அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டதன் பின்னரும் அட்டை உடமையாளர் அட்டையினைத் தொடர்ந்தும் பயன்படுத்துவாராயின் அட்டை உடமையாளர் மாற்றங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என வங்கி கருதும். அட்டை உடமையாளர் 27.2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான விதத்தில் இவ்வுடன்படிக்கையினை முடிவுறுத்திக் கொண்டு அட்டைகளை வங்கிக்கு திருப்பிவிடுதல் வேண்டும். அட்டை உடமையாளர் அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் செய்யப்பட்ட அனைத்துக் கட்டணங்களுக்கும் விதிப்புக்களுக்கும் தொடர்ந்தும் பொறுப்பும் பொறுப்பாண்மையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**36. சட்டம் மற்றும் நியாயாதிக்கம்**

இவ்வுடன்படிக்கை இலங்கையிலுள்ள சட்டங்களுக்கிணங்க அவற்றினால் ஆளுகை செய்யப்பட்டு அவற்றிற்கேற்ப பொருள்கோடப்படல் வேண்டும். இவ்வுடன்படிக்கை சட்டம், சராசரி ஒழுங்குவிதிகள் அல்லது மத்திய வங்கியினால் விடுவிக்கப்படும் அறிவுறுத்தல்கள் அல்லது வேறேதேனும் சட்ட நியதிச் சபைத் திருத்தங்கள் சாத்தியமெனின் அதற்கேற்ப தன்னியக்கமாகவே திருத்தப்படும் நிலையினைக் கொண்டதாகும். அட்டையும் அட்டைக் கணக்கும் செல்லுபடியாகக்கூடிய மற்றும் சட்ட பூர்வமான நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தமுடியும். அட்டையை அல்லது அட்டைக் கணக்கினை வேறுஏதேனும் நோக்கத்திற்காக அட்டை உடமையாளர் பயன்படுத்துமிடத்து அல்லது வேறு எவரேனுமாள் பயன்படுத்த அனுமதிக்கப்படுமிடத்து அட்டை உடமையாளர் அத்தகைய பயன்பாட்டிற்கு பொறுப்பாளியாதல் வேண்டும் என்பதுடன்/ அத்தகைய பயன்படுத்தலின் விளைவாக வங்கிக்கும் மாஸ்டர் கார்ட் இன்ரநஷனல் இன்கோப்பிரேட்டிற்கு ஏற்பட்ட இழப்புக்கள்/செலவுகளை திருப்பி அனுப்புமாறும் கேட்டுக்கொள்ப்படும்.

**37. சாட்டுதலின் நியதிகள்**

அட்டை உடமையாளர் எந்தவொரு நேரத்திலும் எதிர்காலத்திலும் வங்கியினால் இவ்வுடன்படிக்கை முழுவதையும் அல்லது ஏதேனும் பகுதியை மாஸ்டர் கார்ட் இன்ரநஷனல் இன்கோபரேட்டிற்கு அல்லது அதன் இணைந்த கம்பனிகளுக்கு அல்லது குறித்துரைக்கப்பட்டவருக்கு சாட்டுதல் பண்ணுவதற்கு இத்தால் இணங்குகிறார் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சாட்டுதல்கள் வங்கியினால் அல்லது எவரேனும் மாஸ்டர் கார்ட் இன்ரநஷனல் இக்கோப்பிரடிங் நிறுவனத்தினால் அட்டை உடமையாளருக்கு வழங்கப்பட்ட சாட்டுதல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.